சுராவின்

# TNPSC

## ஒருங்கிணைக்கப்பட்ட

## GROUP-IV மற்றும் VAO தேர்வு

**CCSE-IV (எஸ்.எஸ்.எல்.சி. தரம்)**

## முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகளின் ஒரிஜினல் வினாத்தாள்களின் தொகுப்பு

**2013 முதல் 2025 வரை**
**நடைபெற்ற குரூப்–IV மற்றும் VAO தேர்வு**
**ஒரிஜினல் வினாத்தாள்கள்**
**விளக்கமான விடைகளுடன்**

**2000 முதல் 2012 வரை**
**நடைபெற்ற குரூப்–IV மற்றும் VAO தேர்வு**
**ஒரிஜினல் வினாத்தாள்கள் விடைகளுடன்**
தேவையான வினாக்களுக்கு விளக்கமான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

வீ.வீ.கே. சுப்புராசு

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

B 1015

© வெளியீட்டாளர்கள்

TNPSC ஒருங்கிணைக்கப்பட்ட Group-IV மற்றும் VAO தேர்வு CCSE-IV (எஸ்.எஸ்.எல்.சி. தரம்)
**முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகளின் ஒரிஜினல் வினாத்தாள்களின் தொகுப்பு**

**வீ.வீ.கே. சுப்புராசு**

**ISBN: 978-93-6417-740-5**
**Code : B 1015**

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி மற்றும் மின்பதிவேற்றம் / மின்பதிவிறக்கம் செய்யவோ கூடாது)

**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்**

**தலைமை அலுவலகம்:** 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-48629977, 42043273

**சங்கர் பிரிண்டர்ஸ், சென்னை-600 042-இல்** அச்சடிக்கப்பட்டு,
**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்,**
1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
**திரு. வீ.வீ.கே. சுப்புராசு** அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி எண் : 91–44–48629977
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

# பொருளடக்கம்

## பொது அறிவும் பொதுத்தமிழும்

பக்கம்

- TNPSC Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் விளக்கமான விடைகளுடன் – 2025 ............ 1
- TNPSC CCSE-IV Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2024 ............ 49
- TNPSC CCSE-IV Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2022 ............ 77
- TNPSC CCSE-IV Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2019 ............ 109
- TNPSC CCSE-IV Group-IV cum VAO தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2018 ............ 132
- TNPSC Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2016 ............ 154
- TNPSC VAO தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2016 ............ 177
- TNPSC Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2014 ............ 197
- TNPSC VAO தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2014 ............ 217
- TNPSC Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2013 ............ 238
- TNPSC Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – ஜூலை 2012 ............ 260
- TNPSC VAO தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2012 ............ 274
- TNPSC Group-IV மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புத் தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – 2011 ............ 288
- TNPSC VAO தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – பிப்ரவரி 2011 ............ 297
- TNPSC Group-IV சர்வேயர் தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – ஆகஸ்ட் 2008 ............ 306
- TNPSC Group-IV சிறப்புப் போட்டித் தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – பிப்ரவரி 2008 ............ 315
- TNPSC Group-IV தட்டச்சர் தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – ஜனவரி 2008 ............ 325
- TNPSC VAO தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – ஜூன் 2007 ............ 334
- TNPSC Group-IV உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புத் தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – ஜூன் 2006 ............ 343
- TNPSC Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – டிசம்பர் 2005 ............ 352
- TNPSC - Group-IV தேர்வு ஒரிஜினல் வினாத்தாள் – பிப்ரவரி 2000 ............ 362

கூடுதல் தகவல்கள் ............ 378 – 380

# ஒருங்கிணைக்கப்பட்ட குரூப் IV ஒரிஜினல் வினாத்தாள்களின் பகுப்பாய்வு

## 2024 வினாத்தாள் - பொது அறிவு

| பாடம் | வினாக்கள் |
|---|---|
| இந்தியாவின் வரலாறு மற்றும் பண்பாடு | 7 |
| இந்திய தேசிய இயக்கம் | 10 |
| இந்திய அரசியலமைப்பு | 12 |
| புவியியல் | 3 |
| இந்தியப் பொருளாதாரம் | 7 |
| அறிவியல் | 7 |
| தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக அரசியல் இயக்கங்கள் | 6 |
| தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம் | 5 |
| பொது அறிவு மற்றும் நடப்புக்கால நிகழ்வுகள் | 16 |
| திறனறிவுத் தேர்வு | 27 |
| பொதுத்தமிழ் | 100 |
| மொத்தம் | 200 |

## 2022 வினாத்தாள் - பொது அறிவு

| பாடம் | வினாக்கள் |
|---|---|
| இந்தியாவின் வரலாறு மற்றும் பண்பாடு | 9 |
| இந்திய தேசிய இயக்கம் | 7 |
| இந்திய அரசியலமைப்பு | 14 |
| புவியியல் | 5 |
| இந்தியப் பொருளாதாரம் | 7 |
| அறிவியல் | 10 |
| தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக அரசியல் இயக்கங்கள் | 12 |
| தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம் | 6 |
| பொது அறிவு மற்றும் நடப்புக்கால நிகழ்வுகள் | 5 |
| திறனறிவுத் தேர்வு | 25 |
| பொதுத்தமிழ் | 100 |
| மொத்தம் | 200 |

## 2019 வினாத்தாள் - பொது அறிவு

| பாடம் | வினாக்கள் |
|---|---|
| இந்திய வரலாறு மற்றும் பண்பாடு | 10 |
| இந்திய தேசிய இயக்கம் | 4 |
| இந்திய அரசியலமைப்பு | 17 |
| புவியியல் | 13 |
| இந்தியப் பொருளாதாரம் | 7 |
| அறிவியல் | 19 |
| பொது அறிவு மற்றும் நடப்புக்கால நிகழ்வுகள் | 5 |
| திறனறிவுத் தேர்வு | 25 |
| பொதுத்தமிழ் | 100 |
| மொத்தம் | 200 |

# குரூப் IV மற்றும் VAO ஒரிஜினல் வினாத்தாள்களின் பகுப்பாய்வு

## 2018 வினாத்தாள் - பொது அறிவு

| பாடம் | வினாக்கள் |
|---|---|
| இந்திய வரலாறு மற்றும் பண்பாடு | 11 |
| இந்திய தேசிய இயக்கம் | - |
| இந்திய அரசியலமைப்பு | 8 |
| புவியியல் | 7 |
| இந்தியப் பொருளாதாரம் | 13 |
| அறிவியல் | 15 |
| பொது அறிவு மற்றும் நடப்புக்கால நிகழ்வுகள் | 21 |
| திறனறிவுத் தேர்வு | 25 |
| பொதுத்தமிழ் | 100 |
| மொத்தம் | 200 |

## 2014 வினாத்தாள் - பொது அறிவு

| பாடம் | வினாக்கள் |
|---|---|
| இந்திய வரலாறு மற்றும் பண்பாடு | 9 |
| இந்திய தேசிய இயக்கம் | 7 |
| இந்திய அரசியலமைப்பு | 12 |
| புவியியல் | 7 |
| இந்தியப் பொருளாதாரம் | 9 |
| அறிவியல் | 13 |
| பொது அறிவு மற்றும் நடப்புக்கால நிகழ்வுகள் | 18 |
| திறனறிவுத் தேர்வு | 25 |
| பொதுத்தமிழ் | 100 |
| மொத்தம் | 200 |

## 2013 வினாத்தாள் - பொது அறிவு

| பாடம் | வினாக்கள் |
|---|---|
| இந்திய வரலாறு மற்றும் பண்பாடு | 17 |
| இந்திய தேசிய இயக்கம் | 9 |
| இந்திய அரசியலமைப்பு | 8 |
| புவியியல் | 8 |
| இந்தியப் பொருளாதாரம் | 14 |
| அறிவியல் | 15 |
| பொது அறிவு மற்றும் நடப்புக்கால நிகழ்வுகள் | 4 |
| திறனறிவுத் தேர்வு | 25 |
| பொதுத்தமிழ் | 100 |
| மொத்தம் | 200 |

# TNPSC CCSE IV Group IV தேர்வு

கால அளவு : **3 மணி நேரம்**
மதிப்பெண் : 300

## ஒரிஜினல் வினாத்தாள் 2025

தேர்வு நாள் : 12.07.2025

## பகுதி - அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

1. **'பாடும் பாடல்' என்ற சொற்கள் எந்த பெயரெச்ச வகையென்று கண்டறிக.**
   **A.** நிகழ்காலப் பெயரெச்சம்
   **B.** இறந்தகாலப் பெயரெச்சம்
   **C.** எதிர்காலப் பெயரெச்சம்
   **D.** குறிப்புப் பெயரெச்சம்

**விளக்கம் :** **விடை : C**

பாடிய பாடல் – இறந்தகாலப் பெயரெச்சம்
பாடுகின்ற பாடல் – நிகழ்காலப் பெயரெச்சம்
பாடும் பாடல் – எதிர்காலப் பெயரெச்சம்
நல்ல பாடல் – குறிப்புப் பெயரெச்சம்

2. **'நட' என்னும் வேர்ச்சொல்லின் வழி உயர்திணை வினையாலணையும் பெயரைக் கண்டறிக.**
   **A.** நடந்தது
   **B.** நடப்பது
   **C.** நடப்பவை
   **D.** நடந்தவன்

**விளக்கம் :** **விடை : D**

ஒரு வினைமுற்றானது, வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறித்தால் அது வினையாலணையும் பெயர் ஆகும்.
**(எ.கா.)** அகழ்ந்தவர், வந்தவர், பொறுத்தவர், நடந்தவன்
மேற்கண்ட அனைத்தும் உயர்திணை வினையாலணையும் பெயர்கள் ஆகும்.
நடந்தது, நடப்பது, நடப்பவை ஆகியவை அஃறிணையைக் குறிக்கும் சொற்களாகும்.

3. **'வை' என்னும் வேர்ச்சொல்லின் ஏவல் வினைமுற்றினைக் கண்டறிக.**
   **A.** வைத்த
   **B.** வைத்து
   **C.** வைத்தது
   **D.** வைத்தாள்

**விளக்கம் :** **விடை : ✶**

**கொடுக்கப்பட்டுள்ள வினா தவறானது.**
ஒரு சொல்லில் முதல் நிலையாக அமையும் பகுதியே வேர்ச்சொல் ஆகும். இது கட்டளைச் சொல்லாக ஏவல் வினைமுற்றாக வரும். **வை என்பதே வேர்ச்சொல்தான்.**
வை – வேர்ச்சொல்
வைத்தாள் – வினைமுற்று
வைத்த – பெயரெச்சம்
வைத்து – வினையெச்சம்
வைத்தது, வைத்தவர், வைத்தவள்; வைத்தவன் – வினையாலணையும் பெயர்
வைத்தல் – தொழிற்பெயர்

4. **குறில், நெடில் சொற்களுக்குச் சரியான பொருளைக் கண்டறிக.**
   **கணம் – காணம்**
   **A.** கூட்டம், பொன் **B.** பொன் , கூட்டம்
   **C.** கூட்டம், காடு **D.** காடு, தோட்டம்

**விளக்கம் :** **விடை : A**

கணம் என்றால் கூட்டம் அல்லது திரட்சி என்பது பொருளாகும்.
காணம் என்ற சொல் கொள்ளு என்ற பயிறு வகை, நிறுத்தலளவையுள் ஒன்று, பொன், பொற்காசு, செக்கு போன்ற பல பொருள்களாக் குறிக்கும்.

5. **சரியான விடைக் குறிப்பைத் தேர்க.**
   **கூற்று : 'தந்தப் பலகை' என்பதன் பொருள் 'கொடுத்த பலகை' என்பதாகும்.**
   **காரணம் : இரண்டு சொற்களுக்கு இடையில் 'ப்' என்ற ஒற்றெழுத்து மிகுந்து வந்ததால், கொடுத்த பலகை என்னும் பொருளைக் குறிக்கிறது.**
   **A.** கூற்று – சரி ; காரணம் – தவறு
   **B.** கூற்று – தவறு ; காரணம் – சரி
   **C.** கூற்று – சரி ; காரணம் – சரி
   **D.** கூற்று – தவறு ; காரணம் – தவறு

**விளக்கம் :** **விடை : D**

'தந்த பலகை' என்றால் கொடுத்த பலகை என்பது பொருளாகும்.
தந்த பலகை என்பது இறந்தகால பெயரெச்சம் ஆகும். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைத் தவிர, மற்ற பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.
தந்தப் பலகை என வல்லினம் மிகுந்து வந்தால், அது தந்தத்தால் செய்த பலகை என்பது பொருளாகும்.

6. **பின்வருவனவற்றுள் சந்திப் பிழையற்ற சொற்றொடரைத் தேர்க.**
   **A.** அங்குக் கேட்டேன் **B.** அங்கு கேட்டேன்
   **C.** இங்கு பேசாதே **D.** எங்கு சென்றாய்

**விளக்கம் :** **விடை : A**

அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாண்டு ஆகிய இடப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.
அங்கு + கண்டேன் – அங்குக் கண்டேன்
அங்கு + கேட்டேன் – அங்குக் கேட்டேன்
எங்கு + பார்த்தாள் – எங்குப் பார்த்தாள் ?
ஆங்கு + தேடினர் – ஆங்குத் தேடினர்
ஈங்கு + கூடினர் – ஈங்குக் கூடினர்
யாண்டு + சென்றது – யாண்டுச் சென்றது ?

7. **இரு பொருள் தருக : தாரணி**
   **A.** சூரியன், உலகம் **B.** கதிரவன், மதி
   **C.** கடல், பூமி **D.** பூமி, உலகம்

**விளக்கம் :** **விடை : D**

தாரணி என்ற சொல்லுக்கு பூமி, உலகம், மலை, மலர் மாலை போன்ற பல பொருள்கள் உள்ளன.

8. **ஒருபொருட்பன்மொழியில் 'மீமிசை ஞாயிறு' என்னும் சொற்கள் உணர்த்தும் பொருளைக் கண்டறிக.**
   **A.** பக்கப்பகுதி **B.** கீழ்ப்பகுதி
   **C.** நடுப்பகுதி **D.** மேல்பகுதி

**விளக்கம் :** **விடை : D**

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்ந்து அமைந்திருப்பது ஒருபொருட்பன்மொழி எனப்படும்.
**(எ.கா.)** திருமால் குன்றம் **உயர்ந்தோங்கி** நிற்கிறது.
அந்தக் குழந்தையின் கண்கள் **குழிதாழ்ந்து** காணப்படுகின்றன.
நடுமையம், மீமிசை ஞாயிறு ஆகிய சொற்களில் **நடுப்பகுதி** என்னும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் என்னும் இரு சொற்களும், **மேற்பகுதி** என்னும் பொருளைத் தரும் மீ, மிசை என்னும் இரு சொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்துகின்றன.

9. **பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்,**

**முரல், வகுலி, வாளை, வியாளம்**

A. முரல் B. வகுலி
C. வாளை D. வியாளம்

**விளக்கம் :** **விடை : D**

முரல், வகுலி, வாளை ஆகியவை மீன் வகைகள் ஆகும். வியாளம் என்றால் பாம்பு, புலி ஆகியவற்றைக் குறிக்கும் சொல் ஆகும்.

10. **பொருத்துக.**

a. சாந்து 1. இழிதல்
b. குருவி 2. குடை
c. சுனை 3. ஒப்பு
d. அருவி 4. அரை

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 2 | 1 |
| B. | 4 | 1 | 2 | 3 |
| C. | 2 | 4 | 1 | 3 |
| D. | 4 | 2 | 1 | 3 |

**விளக்கம் :** **விடை : A**

◆ **சிலப்பதிகாரம் – மதுரைக் காண்டம் – புறஞ்சேரி இறுத்த காதை**

**காழ், அகில், சாந்தம், கமழ்பூங் குங்குமம்,**
**நாவிக் குழம்பு, நலம்கொள் தேய்வை – இளங்கோவடிகள்**

சாந்தம் அல்லது சாந்து என்பது சந்தனத்தைக் குறிக்கும் சொல், சந்தனம் என்பது அரைக்கப்படும் அல்லது தேய்க்கப்படும் ஒரு பொருளாகும்.

◆ **சிலப்பதிகாரம் – வஞ்சிக் காண்டம் – குன்றக் குரவை**

**“குருவி ஒப்பியும் கிளி கடிந்தும்**
**குன்றத்துச் சென்று வைகி,**
**அருவி ஆடியும் சுனை குடைந்தும்**
**அவவுற்று வருவேம்முன், – இளங்கோவடிகள்**

**பொருள் :** தினைப்புனங்களிலே வந்து படிகின்ற குருவிகளை ஓட்டியும், கிளிகளைத் துரத்தியும், மலையிடத்திலே செயல்புரிந்துவிட்டு, அருவி நீராடியும், சுனை நீரிலே குடைந்தும் வருகின்றோம்.

◆ **சிலப்பதிகாரம் – வஞ்சிக் காண்டம் – குன்றக் குரவை**

**இந்திர வில்லின் எழில்கொண்டு, இழுமென்று**
**வந்தீங்கு இழியும் மலையருவி ஆடுதுமே – இளங்கோவடிகள்**

**பொருள் :** இந்திரவில் போன்ற அழகினையும் தன்னுட் கொண்டதாக, இழும் என்ற ஒலியோடு வீழ்ந்து இங்கே காணப்படும் மலை அருவியிலே நீராடலாம். வாராய் !

11. **ஒலி மரபைக் கண்டறிக.**

**புள்**

A. நரலும் B. கருவும்
C. சிமிழ்க்கும் D. சீறும்

**விளக்கம் :** **விடை : A**

நரலும் என்ற ஒலிமரபு பறவைகளின் ஒலி மரபுச் சொல் ஆகும். புள் என்றால் பறவையினம் ஆகும். ஒவ்வொரு பறவை இனத்திற்கும் ஒரு குறிப்பிட்ட ஒலிமரபு உள்ளது. எடுத்துக்காட்டாக காகம் கரையும், சேவல் கூவும், ஆந்தை அலறும், குயில் கூவும், புறா குனுகும்,, மயில் அகவும், வாத்து கத்தும், கூகை குழறும் போன்றவற்றைக் கூறலாம். இங்கு புள் என்று பொதுவான பெயர் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே பறவைகளின் பொது ஒலி மரபுச் சொல்லான நரலும் என்பது சரியான விடை ஆகும்.

### அகநானூறு – 13

**வெண்குருகு நரல வீசும்**
**நுண்பல் துவலைய தண்பனி நாளே**
**– பெருந்தலைச் சாத்தனார்**

நரலும் – கொக்குகள் எழுப்பும் ஒலியைக் குறிக்கிறது.

**குறிப்பு :**

**TNPSC விடைக் குறிப்பில் ‘சிமிழ்க்கும்’ என்பது விடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அது தவறாகும். சிமிழ்க்கும் என்றால் கட்டுவது அல்லது பிணிப்பது என்று பொருளாகும்.**

எ.கா: **தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த்து அற்று.**

**பிரிவு :** அறத்துப்பால்
**இயல் :** துறவறவியல்
**அதிகாரம் :** கூடாவொழுக்கம் (28)
**குறள் எண் :** 274

**பொருள் :** தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தகாத செயல்களைச் செய்வது, புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளைப் வலைவீசிப் பிடிப்பது போலாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

தவம் மறைந்து – தவவேடம்
அல்லவை – நன்மை அல்லாத செயல்கள்
புதல் – புதர்
மறைந்து – ஒளிந்து
வேட்டுவன் – வேடன்
புள் – பறவை
சிமிழ்த்து – பிணித்து, கட்டுவது
புள் சிமிழ்த்து – பறவைகளை வலையில் பிணித்தல்
அற்று – அத்தன்மையது

திருக்குறளுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர்களுள் ஒருவரான **பரிதி** என்பவர் புள்சிமிழ்த்து என்பதற்கு **பறவையை வதைத்தல் (கொடுமை செய்தல்)** என்று உரை எழுதியுள்ளார். பழைய உரையாசிரியர்களுள் மற்றொருவரான, **காலிங்கர்** என்பவர் வலையை விரித்து வைத்த வேடன், புதர்களின் பின்னே மறைந்து நின்று பறவைகளை வரவழைக்க, வாயின் மேல் விரல் வைத்து வினோதமான ஒலியை எழுப்புவதைப் போல என்று விளக்கம் அளித்துள்ளார். பெரும்பாலான உரையாசிரியர்கள் சிமிழ்த்தல் என்பதற்குப் **பிணித்தல்** என்றே எழுதியுள்ளனர்.

12. **பிறவினைத் தொடரைக் கண்டறிக.**

A. அன்பு பாடல் பாடினாள்
B. கவின்மொழி திருக்குறள் கற்றாள்
C. அடிகள் மறை ஓதினர்
D. அரசன் மாலை அணிவித்தான்

**விளக்கம் :** **விடை : D**

வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும். **அரசன் மாலை அணிந்தான்** என்பது தன்வினை ஆகும்.

வினையின் பயன் எழுவாயை அன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை ஆகும். **அரசன் மாலை அணிவித்தான்** என்பது பிறவினை ஆகும்.

13. **எவ்வகை வினை என்பதைக் கண்டறிக.**

**இரண்டாம் வேற்றுமையில் இருப்பது முதல் வேற்றுமையாகவும், முதல் வேற்றுமையில் இருப்பது மூன்றாம் வேற்றுமையாகவும் மாறும் வினை எப்போது நிகழும் ?**

A. செய்வினை செயப்பாட்டுவினையாக மாறும்போது
B. செயப்பாட்டுவினை செய்வினையாக மாறும்போது
C. தன்வினை பிறவினையாக மாறும்போது
D. பிறவினை தன்வினையாக மாறும்போது

**விளக்கம் :** **விடை : A**

1. செய்வினைகளோடு **ஆயிற்று, போயிற்று** என்ற துணைவினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகளை உருவாக்கும்.
**(எ.கா.)** வேலை வந்தாயிற்று, வீடு கட்டியாயிற்று.
2. செய்வினைப் பகுதியோடு **உண், படு** முதலான துணைவினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகளை உருவாக்கும்.
**(எ.கா)** கொலையுண்டான், வதைபட்டான்.

3. முதல் வேற்றுமை கருத்தா **ஆல் என்ற உருபை** ஏற்று மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாயின், அதன் தொழில் செயப்பாட்டுப்பொருளைத் தரும்.

**(எ.கா.)** அரசன் கோயிலைக் கட்டினான் – செய்வினை
கோயில் அரசனால் கட்டப்பட்டது – செயப்பாட்டுவினை

செய்வினையில் உள்ள **அரசன்** என்பது முதல் வேற்றுமைக் கருத்தா. இது செயப்பாட்டுவினையாக மாறும் பொழுது **அரசனால்** என்ற மூன்றாம் வேற்றுமை உருபை ஏற்றது.

செய்வினையானது **படு** என்ற விகுதியைப் பெற்று கட்டப்பட்டது என்றாயிற்று.

செய்வினையில் உள்ள செயப்படுபொருளான **கோயிலை** என்ற இரண்டாம் வேற்றுமை, செயப்பாட்டுவினையில் முதல் வேற்றுமையாகி **கோயில்** என அமைந்துள்ளது.

**14. புவியியலில் Advance – என்னும் சொல்லிற்கு இணையான கலைச்சொல்லைத் தருக.**

**A.** ஃபெல்ஸ்பார் கனிமவகை
**B.** கடற்கரையியக்கம்
**C.** பெரும் நில அதிர்விற்குப் பிறகான சிறு அதிர்வுகள்
**D.** வியாழனின் துணைக்கோள்

**விளக்கம்:** **விடை : B**

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின், கலைச்சொல் அகராதியில் Advance என்பதற்குப் புவியியல் பிரிவில் கடற்கரையியக்கம் என்று கொடுக்கப்பட்டுள்ளது.

**15. பொருத்துக .**

| | | |
|---|---|---|
| **a.** Pre - censorship | **1.** உடைமை |
| **b.** Possession | **2.** முன் தணிக்கை |
| **c.** Prescription | **3.** முனைமம் |
| **d.** Premium | **4.** நீடனுபோகம் |

**குறியீடுகள் :**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A.** | 2 | 1 | 4 | 3 |
| **B.** | 1 | 2 | 3 | 4 |
| **C.** | 4 | 3 | 2 | 1 |
| **D.** | 1 | 4 | 3 | 2 |

**விளக்கம் :** **விடை : A**

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் கலைச்சொற்கள் :

| பிரிவு | ஆங்கிலச்சொல் | இணையான தமிழ்க் கலைச்சொல் |
|---|---|---|
| சட்டம் (Law) | Pre–censorship | முன் தணிக்கை |
| மனையியல் (Home Science) | Possession | உடைமை, துய்ப்புரிமை |
| சட்டம் (Law) | Prescription | நீடனுபோகம் |
| வங்கியியல் (Banking) | Premium | முனைமம், முன்கட்டணம் |

**16. 'தனிமரம் காடாதல் இல்' என்ற பழமொழி உணர்த்தும் பொருள்**

**A.** ஆசையும் அழிவும்
**B.** தீயவரைத் தண்டித்தல்
**C.** பகையை நீக்குதல்
**D.** நட்பைப் பெருக்குதல்

**விளக்கம் :** **விடை : C**

பழமொழி நானூறு – பாடல் எண் 286

**எதிர்த்த பகையை இளைதாய போழ்தே**
**கதித்துக் களையின் முதிராதே தீர்த்து**
**நனிநயப்பச் செய்தவர் நண்பெல்லாந் தீரத்**
**தனிமரம் காடாதல் இல்.** **– முன்றுறை அரையனார்**

**பொருள் :** தம்மைப் பகைத்து நின்ற பகைவரை அவரது பகைமை உண்டான காலத்திலேயே அவர்களின் நண்பர்கள் அனைவரையும், அவரிடம் கொண்ட நட்பை முற்ற அறுத்துத் தன்னை விரும்பும்படி செய்ய வேண்டும். அவ்வாறு செய்து விரைவாக பகைவரின் வலிமை நீங்கிடச் செய்தால், அந்தப் பகை முதிராது. தனியே ஒரு மரம் காடாக ஆவதில்லை. இப்பாடலின் மையக்கருத்து, பகையை விரைந்து அழித்தல் ஆகும்.

**பழமொழி விளக்கம் :** தனியாக இருக்கும் ஒரு மரம் காடாகாது. பகைவரின் நண்பர்களைப் பிரித்துவிட்டால், அவர் தனிமரம் போல்வர், வலிமையை இழந்து விடுவர்.

**17. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும் பிற்பயக்கும் நற்பா லவை. – இக்குறள் உணர்த்தும் பழமொழியைக் கண்டறிக.**

**A.** எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
**B.** ஊரார் உடைமைக்குப் பேயாய் பறவாதே.
**C.** கிட்ட நெருங்க முட்டப் பகை.
**D.** குந்தித் தின்றால் குன்றும் மாளும்.

**விளக்கம் :** **விடை : B**

## திருக்குறள்

**பொருட்பால் – அமைச்சியல் – வினைத்தூய்மை**

**அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை.** **– குறள் எண் 659**

**பொருள் :** பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம் பெற்றவன் வருந்துமாறு அகன்று போய்விடும். நல்ல வழியில் வந்தவற்றை இழந்தாலும் பின்னர் பயன் தரும். எனவே பிறர் உடைமையைப் பறிக்கக் கூடாது.

**18. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைக் கண்டறிக.**

| | | |
|---|---|---|
| **a.** அலை ஓய்ந்த கடல் போல் | **1.** நடுங்குதல் |
| **b.** அடியற்ற மரம் போல் | **2.** மனம் உடைதல் |
| **c.** மத்தில் அகப்பட்ட தயிர் போல் | **3.** அமைதி |
| **d.** புயலில் சிக்கிய பூங்கொடி போல் | **4.** வீழ்தல். |

**குறியீடுகள் :**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A.** | 3 | 4 | 2 | 1 |
| **B.** | 3 | 1 | 4 | 2 |
| **C.** | 4 | 3 | 2 | 1 |
| **D.** | 4 | 1 | 3 | 2 |

**விளக்கம் :** **விடை : A**

**அலை ஓய்ந்து கடல் ஆடுவது இல்லை (பழமொழி நானூறு).** அலை ஓய்ந்த கடல் போல் என்ற உவமை அமைதியைக் குறிக்கிறது. அலை ஓய்ந்த கடல் போல் மனம் சலனமற்று இருந்தது.

அடியற்ற மரம் போல் என்ற உவமை வேர் இல்லாத மரம் வலுவிழந்து வீழ்தலைக் குறிக்கிறது. கணவன் இறந்த செய்தி கேட்டு கண்ணகி அடியற்ற மரம் போல் வீழ்ந்தாள்.

மத்தில் அகப்பட்ட தயிர் போல் என்ற உவமை மனம் உடைந்து போதலைக் குறிக்கிறது. தயிர் கடையும் போது, மத்தின் இடையில் அகப்பட்டு தயிர் உழல்வது போல மனம் உடைந்து, நிம்மதியற்று இருக்கும் நிலையாகும்.

புயலில் சிக்கிய பூங்கொடி போல என்ற தொடர், நிலைகுலைந்து போதல், நடுங்குதல் போன்ற நிலைகளுக்கு உவமையாகக் கூறப்படுகிறது. அறிஞர் அண்ணாவின் நாடகங்களில் துன்பமுற்ற பெண்ணைக் குறிக்கும் போது, வேங்கையிடம் அகப்பட்ட புள்ளிமான் போல, புயலில் சிக்கிய பூங்கொடி (கொடி வகை தாவரம்) போல என்ற உவமைகள் பெரும்பாலும் கையாளப்பட்டுள்ளன.

**19. உகிர்ச் சுற்றின் மேல் உலக்கை விழுந்தாற் போல – இத்தொடரில் உகிர் சுற்று என்பது என்ன ?**

**A.** கால்சுற்று **B.** கைச்சுற்று
**C.** நகச்சுற்று **D.** திருமண்சுற்று

**விளக்கம் :** **விடை : C**

**சீறாப்புராணம் – விவாதத்துக் காண்டம் – புலி வசனித்த படலம்**

**“நிரம்பும் வள்உகிர் மடங்களின் இனங்களில் நிணமுண் டிருப்ப னைக்கைமும் மதக்கரிக் கோட்டினை வீழ்த்திட – உமறுப்புலவர்**

**பொருள் :** அப்புலியானது, கூர்மையான நகங்களையுடைய சிங்கக் கூட்டங்களின்றி, மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணும் .

உகிர் என்றால் நகம் என்பது பொருளாகும்.

**20. தோழன் என்று பொருள் தரும் காம்ரேட் என்ற சொல் எம்மொழியில் இருந்து பெறப்பட்டது ?**

**A.** ஜப்பான் மொழி **B.** சீன மொழி

**C.** போர்த்துக்கீசிய மொழி **D.** பிரெஞ்சு மொழி

**விளக்கம் :** **விடை : C**

**காம்ரேட்** என்பது போர்த்துக்கீசிய மொழிச் சொல் ஆகும். காம்ரேட் என்றால் **தோழர்** அல்லது நண்பர் அல்லது சக படை வீரன் என்று பொருள்படும். **திரு.வி.கல்யாணசுந்தரனார்** அவர்கள் காம்ரேட் என்ற சொல்லைத் தோழர் என்று மொழிபெயர்த்து பயன்படுத்தினார். போர்த்துக்கீசிய மொழிச் சொல்லான காம்ரேட் என்பது பின்னாளில் பிரெஞ்சுப் புரட்சியிலும் ரஷ்யப் புரட்சியிலும் பயன்படுத்தப்பட்டது.

தற்போது நாம் தமிழாக எண்ணிப் பேசுகின்ற அலமாரி, கிராம்பு, சாவி, ஜன்னல், மேஸ்திரி போன்ற சொற்கள் போர்த்துக்கீசியச் சொற்களே ஆகும்.

**21. சரியான இணையைக் கண்டறிக.**

**1. தாராபாரதி – ஆசியஜோதி**
**2. முடியரசன் – வீரகாவியம்**
**3. கவிமணி – இதய ஒலி**
**4. இரசிகமணி – விரல் நுனி வெளிச்சங்கள்**

**சரியான விடையளி :**

**A.** 2 சரி **B.** 1 சரி

**C.** 4 சரி **D.** 3 சரி

**விளக்கம் :** **விடை : A**

**முடியரசன் எழுதிய நூல்கள் :** பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள்.

**தாராபாரதி எழுதிய நூல்கள் :** புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள், இன்னொரு சிகரம், பூமியைத் திறக்கும் பொன்சாவி.

**கவிமணி எழுதிய நூல்கள் :** ஆசியஜோதி, மலரும் மாலையும், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் உள்ளிட்ட பல நூல்கள்

**இரசிகமணி எழுதிய நூல்கள் :** இதய ஒலி, கம்பர் யார் ? உள்ளிட்ட பல நூல்கள் மற்றும் உரை நூல்கள்.

**22. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் அழைக்கப்பட்ட விதத்தைக் கண்டறிக.**

**A.** கோலாமி **B.** பா்ஜி

**C.** கொண்டா **D.** கண்ணெழுத்துகள்

**விளக்கம் :** **விடை : D**

கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் எனப்பட்டன. **கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி** என்ற சிலப்பதிகாரத் தொடர் இதனைக் கூறுகிறது.

**23. ஏலாதியில் இடம்பெறாத மருந்துப் பொருள்**

**1. சுக்கு**
**2. திப்பிலி**
**3. கண்டங்கத்திரி**
**4. சிறுநாவற்பூ**

**சரியான விடையளி :**

**A.** 1 மட்டும் **B.** 2 மட்டும்

**C.** 3 மட்டும் **D.** 4 மட்டும்

**விளக்கம் :** **விடை : C**

ஏலாதி என்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார். 1 : 2 : 3 : 4 : 5 : 6 என்ற விகிதத்தில் ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்ற ஆறு வகை பொருள்களால் ஆன மருந்து உடல் நோயை நீக்குவது போல ஏலாதியில் அமைந்துள்ள ஒவ்வொரு பாடலிலும் உள்ள ஆறு கருத்துகள் மக்களின் அறியாமையை நீக்கும் தன்மையுடையன.

**24. பாடலின் அடி இடம்பெற்றுள்ள நூலின் பெயரைத் தெரிவு செய்க.**

**தூற்றின் கண் தூவிய வித்து**

**A.** பழமொழி நானூறு **B.** மூதுரை

**C.** நாலடியார் **D.** திரிகடுகம்

**விளக்கம் :** **விடை : D**

**திரிகடுகம் – 80 ஆவது பாடல்**

**முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சின்**
**நிறை இல்லான் கொண்ட தவமும் - நிறையொழுக்கம்**
**தேற்றாதான் பெற்ற வனப்பும் இவை மூன்றும்**
**தூற்றின்கண் தூவிய வித்து. – நல்லாதனார்**

**பொருள் :** அறத்தைத் தவறாது செயல்படுத்தும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கமில்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதை போன்று பயனற்றவை ஆகும்.

**25. தொடரமைக்க :**

**விரிந்தது – விரித்தது**

**A.** மாலை நேரத்தில் அல்லி இதழ் விரித்தன; மயில் தோகை விருந்தது.

**B.** மாலை நேரத்தில் அல்லி இதழ்கள் விரித்தன ; மயில் தோகை விரித்தன.

**C.** மாலை நேரத்தில் அல்லியின் இதழ்கள் விரிந்தன ; மயில் தோகை விரித்தது.

**D.** மாலை நேரத்தில் அல்லியின் இதழ்கள் விரிந்தன ; மயில் தோகையை விரித்தது.

**விளக்கம் :** **விடை : D**

**விரிந்தது** என்பது தானே நடைபெறும் வினையாகும். பூவின் இதழ்கள் தானே விரிந்தன. **விரித்தது** என்பது ஒரு வினையானது பிறரால் செயல்படுத்தப்படுவதைக் குறிக்கிறது. தோகை தானே விரியாது, மயில்தான் தோகையை வேண்டும் பொழுது விரிக்கும்; தேவையில்லாத பொழுது மடக்கிக் கொள்ளும்.

**26. கூற்று : ‘கலைக் கழகம்’ என்பது கலையைக் கற்பிக்கும் கழகம் ஆகும்.**

**காரணம் : இரண்டு சொற்களுக்கு இடையே ‘க்’ என்ற ஒற்று மிகுவதால் கலையைக் கற்பிக்கும் கழகம் என்று பொருள் கொள்ள வேண்டும்.**

**சரியான விடையளி :**

**A.** கூற்று – சரி ; காரணம் – சரி

**B.** கூற்று – சரி ; காரணம் – தவறு

**C.** கூற்று – தவறு; காரணம் – சரி

**D.** கூற்று – தவறு ; காரணம் – தவறு

**விளக்கம் :** **விடை : A**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து வருவது, உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.

கலைக் கழகம் என்று நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே வல்லினம் மிகுந்து வந்தால் கலையைக் கற்பிக்கும் கழகம் என விரிந்து பொருள் தருகிறது. இரு சொற்களுக்கு இடையில் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபும் **கற்பிக்கும்** என்ற உருபின் பயனும் மறைந்து வந்துள்ளன.

SURA'S

**விளக்கம்** **விடை : (C)**

இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கான பட்டியலை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களே தயாரிப்பதற்கு அதிகாரமளிக்கும் வகையிலான அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதனால் அரசியலமைப்பு ஷரத்துகள் 338B, 342A மற்றும் 366 ஆகியவை திருத்தப்பட்டன.

இந்தச் சட்டத்தின்படி, பிரிவு 342A–இல் இடம்பெற்றிருக்கும் 'மத்திய பட்டியல்' என்பது மத்திய அரசு சார்பில் தயாரிக்கப்படும் சமூக, பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பட்டியல் என்ற விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தங்களுக்கான சமூக, பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (ஓபிசி) பட்டியலை தாங்களே தயாரித்துக் கொள்ளலாம். அது மத்திய ஓபிசி பட்டியலிலிருந்து மாறுபட்டதாகவும் இருக்கலாம் என்றும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**42. கீழ்க்காணும் வாக்கியங்களில் எவையெல்லாம் சரி?**

I. மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம் CDRI கொரோனா வைரஸின் ஒமைக்ரான் மாறுபாட்டை சோதிக்க உள்நாட்டிலேயே "Om" எனும் ஆர்டி–பிசிஆர் கண்டறியும் கருவி உருவாக்கியுள்ளது.

II. ஒமைக்ரானின் குறிப்பிட்ட சோதனைக்கு அரசு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட முதல் கருவி "Om"

III. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மூன்றாவது கொரோனா வைரஸ் சோதனை கருவி "Om"

**சரியான விடையளி :**

A) I மற்றும் II மட்டும் B) II மற்றும் III மட்டும்

C) I மற்றும் III மட்டும் D) I, II மற்றும் III அனைத்தும்

**விளக்கம்** **விடை : (D)**

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம், பிராந்திய ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து ஒமைக்ரான் மாறுபாட்டை கண்டறிவதற்காக நீர் பகுப்பாய்வு அடிப்படையில் பரிசோதனை கருவியை வடிவமைத்துள்ளது. இதன் பெயர் "Om" ஆகும். இதன்மூலம் ஒமைக்ரான் பாதிப்பு இருக்கிறதா இல்லையா என்பதை 2 மணி நேரத்தில் கண்டறிய இயலும். இதற்கு முன்னர் பரிசோதனை முடிவுக்கு குறைந்தபட்சம் 36 மணி நேரம் ஆனது. மேலும் ஒமைக்ரான் மாறுபாட்டை கண்டறிய முழு மரபணு வரிசை முறை 4 முதல் 5 நாட்கள் வரை தேவைப்படுகிறது. இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மூன்றாவது கொரோனா வைரஸ் சோதனை கருவியாகும்.

**43. தீபகற்ப இந்திய ஆறுகளில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிப் பாயும் மூன்று ஆறுகள்**

A) மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா

B) கிருஷ்ணா, நர்மடை மற்றும் தபதி

C) நர்மதை, தபதி மற்றும் மாஹி

D) மாஹி, மகாநதி மற்றும் கோதாவரி

**விளக்கம்** **விடை : (C)**

**தீபகற்ப ஆறுகள்**

♦ தென்னிந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகளாகும்.

♦ பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.

♦ இவை **'பருவகால ஆறுகள்'** அல்லது **'வற்றும் ஆறுகள்'** எனப்படுகின்றன.

♦ மழைப்பொழிவிற்கு ஏற்றாற்போல் நீரின் அளவு மாறுபடுகிறது.

♦ இவை செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியே பாய்கின்றன.

♦ இவை பாயும் திசையின் அடிப்படையில் **'கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்'** மற்றும் **'மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்'** என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

♦ நர்மதை, தபதி மற்றும் மாஹி இவை மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்.

**44. சரியான இணையைக் கண்டுபிடி.**

A) நியூக்ளியோசைடு – நைட்ரஜன் காரம் + பாஸ்பேட்

B) பிரிமிடின்கள் – சைட்டோசின் மற்றும் சர்க்கரை

C) பியூரின்கள் – அடினைன் மற்றும் குவானைன்

D) நியூக்ளியோடைடு – நியூக்ளியோசைடு + சர்க்கரை

**விளக்கம்** **விடை : (C)**

**டி.என்.ஏ. மூலக்கூறின் வேதி இயைபு**

டி.என்.ஏ.–வில் மில்லியன் கணக்கான நியூக்ளியோடைடுகள் உள்ளன. எனவே இது **பாலி நியூக்ளியோடைடு** (poly–பல) எனப்படுகிறது. ஒவ்வொரு நியூக்ளியோடைடுகளும் மூன்று கூறுகளை உள்ளடக்கியது.

1. ஒரு சர்க்கரை மூலக்கூறு – டீ ஆக்சிரைபோஸ் சர்க்கரை
2. ஒரு நைட்ரஜன் காரம்.

டி.என்.ஏ–வில் உள்ள நைட்ரஜன் காரங்கள் இருவகைப்படும். அவை,

i. பியூரின்கள் (அடினைன் மற்றும் குவானைன்)

ii. பிரிமிடின்கள் (சைட்டோசின் மற்றும் தைமின்)

3. ஒரு பாஸ்பேட் தொகுதி

**நியூக்ளியோசைடு மற்றும் நியூக்ளியோடைடு**

நியூக்ளியோசைடு = நைட்ரஜன் காரம் + சர்க்கரை

நியூக்ளியோடைடு = நியூக்ளியோசைடு + பாஸ்பேட்

இடம்பெற்றுள்ள பியூரின்கள் மற்றும் பிரிமிடின்களுக்கு ஏற்ப நியூக்ளியோடைடுகள் உருவாகின்றன.

**45. மென்மையான வண்டல் பாறை அடுக்குகளின் துளைகளில் உள்ள வாயுவின் பெயர் என்ன?**

A) ஷேல் வாயு B) கோபர் வாயு

C) நீர் வாயு D) ஆக்சிஜன் வாயு

**விளக்கம்** **விடை : (A)**

**ஷேல் வாயு**

இது பூமியின் அடிப்புறத்தில் அமைந்துள்ள சேறு மற்றும் குவார்ட்ஸ், கால்சைட் போன்ற தாதுக்கள் அடங்கிய மென்மையான பாறை அடுக்குகளாகும். இவற்றின் இடையிலுள்ள துளைகளில் எண்ணெய் மற்றும் வாயுக்கள் நிரம்பியுள்ளன. இவற்றை வெளியே எடுக்க **ஹைட்ராலிக் ப்ராக்சரிங்** (ஹைட்ராலிக் முறிவு) என்ற தொழில்நுட்பம் பயன்படுகிறது.

**ஷேல் வாயுவின் விளைவுகள்**

ஷேல் வாயுக்களை எடுப்பதற்காக இடப்படும் துளைகள் நிலத்தடி நீர் மட்டத்தினை வெகுவாகப் பாதிப்பதால் குடிநீர் ஆதாரம் மாசடைகிறது. மேலும் மண்வளத்தையும் பாதிக்கிறது.

நிலத்தடியில் உள்ள வாயுக்கள் மற்றும் எண்ணெயினை வெளியேற்ற பல மில்லியன் கன அளவு நீரைப் பயன்படுத்த வேண்டியிருப்பதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகப் பாதிக்கிறது.

**46. கூட்டுப் பொருளை அதன் வினைபடு தொகுதியுடன் இணை**

| கூட்டுப்பொருள் | வினைபடு தொகுதி |
|---|---|
| a) ஆல்கஹால் | 1. –COOH |
| b) ஆல்டிஹைடு | 2. –OH |
| c) கீட்டோன் | 3. –CHO |
| d) கார்பாக்ஸிலிக் அமிலம் | 4. $-\overset{\overset{\displaystyle O}{\|}}{C}-$ |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 2 | 3 | 1 | 4 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 2 | 3 | 4 | 1 |

SURA'S

**விளக்கம்** **விடை : (D)**

| சேர்மம் | வினைச்செயல் தொகுதி | பொதுவான வாய்பாடு | உதாரணம் |
|---|---|---|---|
| ஆல்கஹால் | –OH | R-OH | எத்தனால், $CH_3CH_2OH$ |
| ஆல்டிஹைடு | –C(=O)–H | R-CHO | அசிட்டால்டிஹைடு, $CH_3CHO$ |
| கீட்டோன் | –C(=O)– | R-CO-R | அசிட்டோன், $CH_3COCH_3$ |
| கார்பாக்சிலிக் அமிலம் | –C(=O)–OH | R-COOH | அசிட்டிக் அமிலம், $CH_3COOH$ |
| எஸ்டர் | –C(=O)–OR | R-COOR | மெத்தில் அசிட்டேட், $CH_3COOCH_3$ |
| ஈதர் | –O–R | R-O-R | டைமெத்தில் ஈதர், $CH_3OCH_3$ |

**47. வாகனங்கள் பழுது பார்க்கும் பணிமனைகளில் வாகனங்களை உயர்த்த எந்த விதியின் அடிப்படையில் இயங்கும் நீரியல் உயர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன?**

**A)** நியூட்டனின் முதல் விதி **B)** நியூட்டனின் இரண்டாம் விதி
**C)** பாஸ்கல் விதி **D)** மேற்கண்ட அனைத்தும்

**விளக்கம்** **விடை : (C)**

**பாஸ்கல் விதி**

மூடிய மற்றும் ஒய்வு நிலையில் உள்ள திரவத்தின் எந்தவொரு புள்ளிக்கும் அளிக்கப்படும் அழுத்தமானது அத்திரவத்தின் அனைத்துப் புள்ளிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். இக்கருத்தை பிரெஞ்சு அறிவியல் அறிஞர் **பிளெய்ஸ் பாஸ்கல்** என்பவர் முதன்முதலில் எடுத்துரைத்தார்.

**பாஸ்கல் விதியின் அடிப்படையில் செயல்படும் கருவிகள்**

- வாகனங்களைப் பழுதுநீக்கும் பணிமனைகளில் வாகனங்களை உயர்த்துவதற்கு பயன்படும் நீரியல் உயர்த்திகள்.
- வாகனங்களில் உள்ள தடை அமைப்பு (Break)
- பஞ்சுப் பொதிகள் மற்றும் ஆடைப் பொதிகளை குறைவான இடத்தில் அடைத்து வைக்க உதவும் நீரியல் அழுத்தி.

**48. கீழ்க்காணும் சமன்பாடுகளுள் எது விசைக்கான சமன்பாடில்லை?**

**A)** $F = m \times a$ **B)** $F = \Delta P \times t$
**C)** $F = \frac{m(v-u)}{t}$ **D)** $F = \frac{\Delta P}{t}$

**விளக்கம்** **விடை : (B)**

**விசையின் வரையறை**

- ஒரு பொருளின் ஓய்வு நிலையை அல்லது சீரான வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கநிலையை அல்லது இயங்கும் பொருளின் திசையை அல்லது பொருளின் வடிவத்தை மாற்றுவது அல்லது மாற்ற முயல்வது விசை எனப்படும்.
- பொருள்களின் மீது உயிருள்ள அல்லது உயிரற்ற காரணிகளால் செயல்படுத்தப்படும் **தள்ளுதல்** அல்லது **இழுத்தலே** ‘விசை’ எனப்படுகிறது.விசையின் அளவு **வெக்டர்** ஆகும். இது நியூட்டன் (N) என்ற அலகால் குறிக்கப்படுகிறது.
- விசையானது பொருளினைத் தொடுவதன் மூலம் செயல்படுத்தப்பட்டால் அவ்விசை ‘**தொடுவிசை**’ எனப்படுகிறது.
- ஒரு பொருளின் மீது விசையானது செயல்படுத்தப்படும் போது பொருளின் வேகமும் அதன் திசையும் மாற்றமடைகிறது.
- ஒரு பொருளின் மீது விசையானது செயல்படுத்தப்படும் போது பொருளின் அளவு மற்றும் வடிவம் மாறுபடுகிறது.
- விசையானது பொருள் நகரும் திசைக்கு எதிர்த்திசையில் செயல்படுத்தப்படும் போது அது பொருளின் வேகத்தினை குறைக்கிறது அல்லது பொருளின் இயக்கத்தினை நிறுத்துகிறது.
- பொருளின் மீது செயல்படுத்தப்படும் விசையானது, பொருளை ஓய்வு நிலையிலிருந்து இயக்க நிலைக்கோ அல்லது இயக்க நிலையிலிருந்து ஓய்வு நிலைக்கோ மாற்றும்.

**விசையின் சமன்பாடுகள் :**

$$F = m \times a, \quad F = \frac{m(v-u)}{t}, \quad F = \frac{\Delta P}{t}$$

**49. கீழ்க்கண்ட கலப்படத்தை உணவோடு இணை செய்க.**

**a)** ஹைட்ரஜன் பெராக்ஸைடு **1.** பளபளப்பான தோற்றம்
**b)** உணவு நிறமூட்டிகள் **2.** பால்
**c)** கால்சியம் கார்பைடு **3.** பசுமைத் தோற்றம்
**d)** கார்னோபா மெழுகு **4.** வாழைப்பழத்தைப் பழுக்க வைப்பதற்கு

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 1 | 2 | 3 |

**விளக்கம்** **விடை : (B)**

**தெரிந்தே சேர்க்கப்படும் கலப்படப் பொருள்கள் :**

இவை இலாப நோக்கத்திற்காக தெரிந்தே சேர்க்கப்படுகின்றன. (எ.கா)

- வினிகர், சிட்ரிக் அமிலம், சோடியம் பைகார்பனேட் (சமையல் சோடா), பாலில் சேர்க்கப்படும் ஹைட்ரஜன் பெராக்ஸைடு, செயற்கை மாவுப் பொருள், உணவு நறுமணப் பொருள்கள், செயற்கை வேதிப்பொருள்கள் மற்றும் செயற்கை இனிப்பூட்டும் பொருள்கள்.
- வாழைப் பழங்கள் மற்றும் மாம்பழங்கள் போன்றவற்றை பழுக்க வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கால்சியம் கார்பைடு போன்ற வேதிப்பொருள்கள்.
- பச்சைக் காய்கறிகள், பாகற்காய், பச்சைப் பட்டாணி போன்றவற்றில் பசுமை நிறத்தைக் கொடுப்பதற்காக காரீய உலோகம் கலந்த அங்கீகரிக்கப்படாத உணவு நிறமூட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை காய்கறிகளில் வாடியநிலை தெரியாமலிருப்பதற்காகச் சேர்க்கப்படுகின்றன.
- ஆப்பிள் மற்றும் பேரிக்காய் போன்றவற்றின் மேல் பளபளப்பான தோற்றத்தைக் கொடுப்பதற்காக உண்ணக்கூடிய ஆனால் தீங்கு விளைவிக்கும் செயற்கை மெழுகான **செல்லாக்** அல்லது **கார்னேபா** மெழுகு சேர்க்கப்படுகிறது.

**50. பொருத்துக.**

a) சிவசுப்ரமணியனார் — 1. கயத்தாறு கோட்டை
b) கட்டபொம்மன் — 2. சங்ககிரி கோட்டை
c) மருது சகோதரர்கள் — 3. நாகலாபுரம்
d) தீரன் சின்னமலை — 4. திருப்பத்தூர் கோட்டை

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 4 | 1 | 3 | 2 |

**விளக்கம்** **விடை : (A)**

வினா எண் 10–ஐப் பார்க்கவும்.

**தீரன் சின்னமலை**

கொங்குப்பகுதியில் **பழையக்கோட்டை மன்றாடியார்** பட்டம் பெற்ற மதிப்புமிகு குடும்பத்தில் பிறந்தவர் தீரன் என்ற தீர்த்தகிரியார். வில்வித்தை, சிலம்பு, குதிரையேற்றம், நவீன போர் முறைகளில் இவர் வல்லவராக இருந்தார். இவர் வாழ்ந்த கொங்குப் பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒருமுறை வரிவசூல் செய்த பணத்துடன் மைசூருக்குத் திரும்பிக் கொண்டிருந்த முகமது அலி என்பவரை தீர்த்தகிரி வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக் கொண்டார். “சிவமலைக்கும் சென்னிமலைக்கும் இடையே இருந்த **‘சின்னமலை’** வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டதாக சுல்தானிடம் போய்ச் சொல்” என்றார். அதன்பிறகு தீரன் சின்னமலை என்றே அழைக்கப்பட்டு வந்தார்.

சுல்தானின் படைகளும் இவருடைய படைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் தீரன் சின்னமலையே வெற்றிபெற்றார். பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இவர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் திப்புவுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார். இவர் திப்புவின் இறப்பிற்குப் பிறகு கோட்டை ஒன்றைக் கட்டி, அதன் உள்ளிருந்தே போராட்டத்தைத் தொடர்ந்தார். எனவே அந்த இடம் **‘ஓடாநிலை’** என்று அழைக்கப்படுகிறது. கொரில்லா போர் முறையை இவர் கையாண்டார். இறுதியில் இவரது சமையல்காரரால் இவரும் இவரது சகோதரர்களும் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டனர். 1805 ஜூலை 31 அன்று சங்ககிரிகோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

**51. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைக் கண்டறிக.**

A) சிவாஜியின் பாதுகாவலர் தாதாஜி கொண்டதேவ்
B) சிவாஜி ராஜ்கோஷ் கோட்டையில் முடிசூட்டிக் கொண்டார்.
C) சிவாஜியின் படை வீரர்கள் சூரத்தை 1665–இல் சூறையாடினார்
D) 1674–இல் சத்ரபதி எனும் பெயரில் முடிசூடினார்

**விளக்கம்** **விடை : (*)**

**சிவாஜி (கி.பி. 1627 – 1680)**

* சிவாஜி 1627–இல் ஜூன்னார் என்ற இடத்திற்கு அருகே ஷிவ்னார் என்ற பகுதியில் பிறந்தார். அவரது தாயார் **ஜீஜாபாய்,** இராமாயணம், மகாபாரதக் கதைகளை சிவாஜியிடம் கூறுவார். அவற்றால் ஏற்பட்ட தாக்கம் சிவாஜியிடம் வீர உணர்வைத் தூண்டியது. சிவாஜியின் ஆசிரியரும் பாதுகாவலருமான **தாதாஜி கொண்டதேவ்** சிவாஜிக்கு குதிரையேற்றம், போர்க்கலை, அரசு நிர்வாகம் ஆகியவற்றில் பயிற்சியளித்தார்.
* மதத் துறவிகளாக விளங்கிய **ராம்தாஸ் துக்காராம்** ஆகியோர் சிவாஜியிடம் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். துறவி ராம்தாஸ் அவர்களை சிவாஜி தனது குருவாக ஏற்று மரியாதை செலுத்தினார்.
* அரபிக்கடல் பகுதியில் முகலாயரின் முக்கியத் துறைமுகமாக விளங்கிய சூரத் நகரை குறிவைத்து 1664–இல் சிவாஜி தாக்குதல் நடத்தினார். கி.பி. 1674 ஜூன் 6–ஆம் தேதி சிவாஜி **ராய்கர் கோட்டையில்** வேத முறைப்படி அரியணை ஏறினார். **‘சத்ரபதி’** என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

**52. சரியான கூற்றுக்களைக் கண்டறிக.**

1. பாரதியின் ‘இந்தியா’ வார இதழ் மிதவாத தேசியவாதிகளின் குரலாகத் திகழ்ந்தது.
2. 1907–இல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் பாரதி கலந்து கொண்டார்.
3. சக்ரவர்த்தினி, சுதேசமித்ரன் போன்ற பத்திரிகைகளில் பாரதி பணியாற்றினார்.
4. தி இந்து பத்திரிக்கையை வெளியிட்டவர் G. சுப்ரமணிய ஐயர்.

**சரியான விடையளி :**

A) 1 மற்றும் 2 மட்டும் சரி
B) 1, 2 மற்றும் 3 மட்டும் சரி
C) 2 மற்றும் 3 மட்டும் சரி
D) 2, 3 மற்றும் 4 மட்டும் சரி

**விளக்கம்** **விடை : (D)**

**சுப்பிரமணிய பாரதியார்**

* சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் டிசம்பர் 11, 1882–ஆம் ஆண்டு பிறந்தார்.
* சுதேசமித்ரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.
* 1907–ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
* பாலகங்காதர திலகர் மற்றும் அரவிந்தகோஷுடன் சேர்ந்து சுயராஜ்ஜியத்திற்கு ஆதரவாக செயல்பட்டார்.
* ஜி. சுப்ரமணியர் ‘தி இந்து’ பத்திரிக்கையை தொடங்கினார். பாரதியார் 1907–ஆம் ஆண்டு தமிழ் வாரப் பத்திரிகையான இந்தியா பத்திரிகையின் ஆசிரியரானார். அதே சமயத்தில் வெளிவந்த பாலபாரதம் என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் பணியாற்றினார்.
* 1908–ஆம் ஆண்டு சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி சுயராஜ்ஜிய நாளை கொண்டாடினார்.
* அவரது பாடல்களான வந்தேமாதரம், அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம் போன்றவை அச்சிடப்பட்டு தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.
* 1908–ஆம் ஆண்டு வ.உ.சிக்கு எதிராக ஆங்கில அரசு தொடர்ந்த வழக்கில் வ.உ.சிக்கு ஆதரவாக சாட்சி வழங்கினார். இதனால் இவரை கைது செய்ய ஆணை பிறப்பித்தது. எனவே பாரதியார் பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்த பாண்டிச்சேரிக்கு தப்பி ஓடினார்.
* ஆங்கில அரசு 1909–ஆம் ஆண்டு பாரதியின் படைப்புகளுக்கு தடை விதித்தது. நவம்பர் 1918–ஆம் ஆண்டு பாரதியார் சென்னையிலிருந்து சுதேசமித்ரன் பத்திரிகையின் ஆசிரியராக மீண்டும் பணியாற்றினார். செப்டம்பர் 11, 1921–ஆம் ஆண்டு காலமானார்.

**53. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

I. பாளையக்காரர் முறை காகதியப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.
II. கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும்செவலை 1764–இல் மீண்டும் கைப்பற்றினார்.
III. கம்பெனி நிர்வாகத்திற்குத் தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப்கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764–இல் தூக்கிலிடப்பட்டார்.
IV. ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.

**சரியான விடையளி:**

A) I, II மற்றும் IV ஆகியவை சரி
B) I, II மற்றும் III ஆகியவை சரி
C) III மற்றும் IV ஆகியவை சரி
D) I மற்றும் IV ஆகியவை சரி

**விளக்கம்** **விடை : (B)**

வினா எண் 10–ஐப் பார்க்கவும்.

**'பாளையம்'** என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும்.

**'பாளையக்காரர்கள்'** என்பது இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம் கட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது. பாளையக்காரர்களை ஆங்கிலேயர் **'போலிகார்'** (Poligar) என்று குறிப்பிட்டனர். தனிநபர் ஒருவர் ஆற்றிய சீரிய இராணுவ சேவைக்காக அவரின் கட்டுப்பாட்டின் கீழ் பாளையம் கொடுக்கப்பட்டது. இம்முறையானது முதன்முதலில் வாரங்கல்லைச் சேர்ந்த **பிரதாபருத்ரனின்** ஆட்சிக் காலத்தில் காகதீய அரசில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**54. பின்வரும் பத்தியைப் படித்து பின்வரும் வினாவிற்கு பதிலளிக்கவும். இந்த பகுதிக்கான உங்கள் பதில் பத்தியின் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டும்.**

பத்தி

**சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தின் உருவாக்கம் சுதந்திர இயக்கத்தின் வரலாற்றில் ஒரு அற்புதமான வளர்ச்சியைக் குறித்தது. தமிழர்களின் கப்பல் கட்டும் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் ஆர்வத்தில் மக்களுக்குக் கப்பல் கட்டுவதில் நடைமுறைப் பயிற்சி அளிக்கவும் கடல் போக்குவரத்தில் பிரிட்டிஷ் ஏகபோகத்திற்கு சவால் விடுவதில் உறுதியாகவும் வ.உ. சிதம்பரம் 1906–இல் ஷியாலியில் ஒரு நேவிகேஷன் நிறுவனத்தை உருவாக்குவதற்கான தனது முடிவை அறிவித்தார்.**

**பின்வருவனவற்றில் எது பத்தியில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது?**

A) ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனம் அந்த நாட்களில் நல்ல வருமானத்தை ஈட்டியது. இது ஒரு ஈர்க்கக்கூடிய வளர்ச்சியைக் குறித்தது.

B) சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியின் உருவாக்கம் கடல் வணிகத்தில் பிரிட்டிஷ் ஏகபோகத்தை நிறுத்தியது.

C) வ.உ. சிதம்பரம் நேவிகேஷன் நிறுவன விவகாரங்கள் தொடர்பாக எந்த முடிவையும் எடுப்பதில் மற்றவர்களைச் சார்ந்திருந்தார்.

D) கப்பல் கட்டும் பாரம்பரியத்தில் தமிழர்களின் அறிவை மீட்டெடுப்பது நேவிகேஷன் நிறுவனத்தை உருவாக்கியதன் நோக்கமாகும். **விடை : (D)**

**55. குப்தர் காலத்தின் நிலங்களை கீழ்க்கண்டவற்றுடன் சரியாக பொருத்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| a) | சேத்ரா | 1. | தரிசு நிலம் |
| b) | கிலா | 2. | வேளாண்மைக்கு உகந்த நிலம் |
| c) | அப்ரகதா | 3. | குடியிருப்பதற்கு உகந்த நிலம் |
| d) | வஸ்தி | 4. | வன நிலம் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 2 | 1 | 3 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

**விளக்கம்** **விடை : (C)**

**குப்தர் காலத்தில் நிலங்களின் வகை**

| | |
|---|---|
| க்ஷேத்ரா | வேளாண்மைக்கு உகந்த நிலங்கள் |
| கிலா | தரிசு நிலங்கள் |
| அப்ரகதா | வனம் அல்லது காட்டு நிலங்கள் |
| வஸ்தி | குடியிருப்பதற்கு உகந்த நிலங்கள் |
| கபத சரகா | மேய்ச்சல் நிலங்கள் |

**56. கீழ்வரும் கூற்றுகளில் 'நிதி ஆயோக்' பற்றிய எந்தக் கூற்று சரியானது?**

I. அனைத்து மாநில முதல்வர்களும், சட்டமன்றம் கொண்ட யூனியன் பிரதேசங்கள் தவிர ஆளும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

II. இந்தியப் பிரதமர் 'நிதி ஆயோக்கின்' தலைவர் ஆவார்.

III. இந்திய நிதியமைச்சர் துணை தலைவராக செயல்படுகிறார்.

**சரியான விடையளி:**

A) II மற்றும் III மட்டும் B) II மட்டும்

C) I மட்டும் D) I மற்றும் II மட்டும்

**விளக்கம்** **விடை : (B)**

**நிதி ஆயோக்கின் அமைப்பு (Formation of NITI Aayog)**

2015 ஜனவரி முதல் தேதி மத்திய அரசாங்கம் நிதி ஆயோக் அமைக்கப்பட்டதைப் பற்றிய அறிவிப்பை வெளியிட்டது. அதன் முதல் கூட்டம் 2015 பிப்ரவரி 8–ஆம் தேதி பிரதமரின் தலைமையில் நடைபெற்றது.

**நிதி ஆயோக்கின் உறுப்பினர்கள்**

* தலைவர் : பிரதமர்
* ஆட்சி மன்றத்தின் முதலமைச்சர்கள், சட்ட மன்றங்கள் உள்ள ஒன்றியப் பகுதிகளின் முதலமைச்சர்கள் மற்றும் மத்தியப் பகுதிகளின் துணை நிலை ஆளுநர்கள் (Lieutenant Governors).
* ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் கல்விப் பிராந்தியங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கவனிக்க பிராந்திய மன்றங்கள் (Regional Councils) அமைக்கப்படும். இம்மன்றங்கள் பிரதமரால் கூட்டப்படும்.
* வல்லுநர்கள், துறை நிபுணர்கள், கள அனுபவமுடையோர் இதன் சிறப்பு அழைப்பாளர்களாவர்.

**57. கூற்று (A)** : இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் பொருளாதார பண வழங்கலைக் கட்டுப்படுத்துகிறது.

**காரணம் (R)** : அந்நிய செலாவணி பரிவர்த்தனை விகிதத்தை நிலைப்படுத்தவும், பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தவும் விரும்புகிறது.

A) **(A)** தவறு; **(R)** சரி

B) **(A)** சரி; ஆனால் **(R)** தவறு

C) **(A)** சரி; ஆனால் **(R)** என்பது **(A)**விற்கான சரியான விளக்கமல்ல.

D) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி, **(A)**விற்கான சரியான விளக்கமாகும்.

**விளக்கம்** **விடை : (D)**

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் :**

ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. இது பணவியல் கொள்கை மூலம், பண அளிப்பினை மேலாண்மை செய்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934–இன் படி, 1935 ஏப்ரல் 1 முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினை துவங்கியது. இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, குறிப்பாக ஜனவரி 1, 1949 அன்று இந்திய ரிசர்வ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது.

**பண அதிகார அமைப்பு (Monetary Authority)**

இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றை செய்கிறது.

**காகிதப்பண வெளியீடு**

இந்தியாவில் நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப்பணத்தைத் தவிர அனைத்து வகையான காகிதப் பணத்தை வெளியிடுவதிலும் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும். புழக்கத்தில் உள்ள போலியான பணத்தினை கட்டுப்படுத்தும் பொறுப்பும் மைய வங்கிக்கு உண்டு.

SURA'S

# TNPSC Group IV

மதிப்பெண் : 300
நேரம் : 3 மணி

## ஒரிஜினல் வினாத்தாள் 2014

நாள் : 21.12.2014

## பொதுத்தமிழ்

**1. 'கண்ணகி' எனும் சொல்லின் பொருள்**

A) கடும் சொற்களைப் பேசுபவள்
B) கண் தானம் செய்தவள்
C) கண்களால் நகுபவள்
D) கண் தானம் பெற்றவள்

**விளக்கம் :** **விடை: (C)**

கண்களால் சிரிப்பவள் (நகுபவள்) என்னும் பொருள்படும் பெயரே கண்ணகியாகும். கண் + நகி
நிலைமொழியின் ஈற்றில் 'ண' கர ஒற்று (ண்) வந்து வருமொழி முதலில் 'ந'கரம் வந்தால் அது 'ண' கரமாகத் திரியும். கண் + ணகி → கண்ணகி

**2. பொருத்துக.**

| | பகுதி-I | | பகுதி–II |
|---|---|---|---|
| a. | குறிஞ்சி | 1. | நெல்லரிதல் |
| b. | முல்லை | 2. | கிழங்ககழ்தல் |
| c. | மருதம் | 3. | உப்பு விற்றல் |
| d. | நெய்தல் | 4. | வரகு விதைத்தல் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 1 | 3 | 2 | 4 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**விளக்கம் :** **விடை: (A)**

| திணை | தொழில்கள் |
|---|---|
| குறிஞ்சி | கிழங்கு அகழ்தல், தேனெடுத்தல் |
| முல்லை | வரகு விதைத்தல், ஆநிரை மேய்த்தல் |
| மருதம் | நெல்லரிதல் , களைபறித்தல் |
| நெய்தல் | உப்பு விற்றல், மீன்பிடித்தல் |

**3. வண்ணம், வடிவம், அளவு, சுவை என இந்த நான்கும் எதனோடு தொடர்புடையது?**

A) பண்புத்தொகை B) வினைத்தொகை
C) வேற்றுமைத்தொகை D) உம்மைத்தொகை

**விளக்கம் :** **விடை: (A)**

**பண்புத்தொகை**

வண்ணம் – செம்மை, பசுமை, வெண்மை, கருமை
வடிவம் – வட்டம், சதுரம், நாற்கரம்
அளவு – பெருங்கடல், சிறுதுளி, நெடுங்கடல்
சுவை – இனிமை, கசப்பு, துவர்ப்பு
குணம் – நன்மை, தீமை

**4. வெண்டளை விரவிய கலிவெண்பாவால் பாடப்படுவது எது?**

A) பள்ளு B) தூது
C) கலம்பகம் D) அந்தாதி

**விளக்கம் :** **விடை: (B)**

**"பயிறங் கலிவெண் பாவி னாலே**
**உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்**
**சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்**
**பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே"**

– என்று இலக்கண விளக்க நூற்பா, தூதின் இலக்கணம் பற்றி கூறுகிறது. வெண்டளை விரவிய கலிவெண்பாவால் தூது இலக்கியம் பாடப் பெற வேண்டும்.

**5. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| a. | வினைத்தொகை | 1. | நாலிரண்டு |
| b. | உவமைத்தொகை | 2. | செய்தொழில் |
| c. | உம்மைத்தொகை | 3. | பவளவாய் பேசினாள் |
| d. | அன்மொழித்தொகை | 4. | மதிமுகம் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 2 | 4 | 1 | 3 |

**விளக்கம் :** **விடை: (D)**

✶ செய்தொழில் – வினைத்தொகை
✶ செய்த தொழில், செய்கின்ற தொழில், செய்யும் தொழில் என்று முக்காலத்தையும் உணர்த்தியது.
✶ மதிமுகம் – உவமைத்தொகை
✶ மதி போன்ற முகம் என்ற தொடரில் 'போன்ற' என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளது.
✶ நாலிரண்டு – உம்மைத்தொகை
✶ 'நாலும் இரண்டும்' என்ற தொடரிலுள்ள 'உம்' விகுதி மறைந்து வந்துள்ளது.
✶ பவளவாய் பேசினாள் – அன்மொழித்தொகை. பவளம் போன்ற வாயை உடைய பெண் பேசினாள். இங்கு உவமைத்தொகையை அடுத்து 'பேசினாள்' என்ற சொல் தொடர்ந்து வந்து அன்மொழித்தொகை ஆயிற்று.

**6. 'அவன் உழவன்' – என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.**

A) தெரிநிலை வினைமுற்று B) குறிப்பு வினைமுற்று
C) பெயர்ச்சொல் D) தொழிற்பெயர்

**விளக்கம் :** **விடை: (B)**

திணை, பால் போன்றவற்றை வெளிப்படையாகக் காட்டி, காலத்தை மட்டும் குறிப்பால் உணர்த்தியதால் இது குறிப்பு வினைமுற்றாகும்.

**7. பிழையற்ற வாக்கியத்தைக் கூறுக.**

A) வயலில் மாடுகள் மேந்தது
B) வயலில் மாடுகள் மேஞ்சது
C) வயலில் மாடுகள் மேய்ந்தன
D) வயலில் மாடுகள் மேய்ந்தது

**விளக்கம் :** **விடை: (C)**

மேய்ந்தன – பன்மை ; மேய்ந்தது – ஒருமை

**8. பெயர்ச்சொல்லின் வகையறிதல்: நடிகன்**

A) பொருட்பெயர் B) பண்புப்பெயர்
C) தொழிற்பெயர் D) காலப்பெயர்

**விளக்கம் :** **விடை: (A)**

பொருட்பெயர் – உயிருள்ள மனிதன், விலங்கு, பறவை, தாவரம் போன்றவை மற்றும் உயிரற்ற கட்டில், மேஜை, நாற்காலி, பெட்டி போன்ற பொருட்கள்.

**9. பொன்னியிடம் தேன்மொழி தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள் – எவ்வகைத் தொடர்?**

A) நேர்க்கூற்று B) அயற்கூற்று
C) எதிர்மறைக் கூற்று D) கலவைத்தொடர்

SURA'S

**விளக்கம் :** **விடை: (B)**

**நேர்க்கூற்று – அயற்கூற்று**
நான் – தான்
நாளை – மறுநாள்

**நேர்க்கூற்று :** பொன்னியிடம் தேன்மொழி, "நான் நாளை மதுரைக்குச் செல்வேன்" என்று கூறினாள்.

**10. பொருந்தாத சொல்லைத் தேர்வு செய்க.**
A) பெறா அ B) தழீஇ
C) அண்ணன் D) கொடுப்பதூஉம்

**விளக்கம் :** **விடை: (C)**
அண்ணன் – பெயர்ச்சொல்
ஏனைய மூன்றும் அளபெடைகளாகும்.

**11. யாப்பு என்றால் ................ என்பது பொருள்.**
A) அடித்தல் B) சிதைத்தல்
C) கட்டுதல் D) துவைத்தல்

**விளக்கம் :** **விடை: (C)**
செய்யுள் இயற்றுவதற்கு உரிய விதிகளையும் விதி விலக்குகளையும் கூறுவது யாப்பிலக்கணம் ஆகும். யாப்பு என்றால் 'கட்டுவது' என்று பொருளாகும்.

**12. நாயக்கர் மரபில் முடிசூட்டிக் கொண்ட பெண்ணரசி யார்?**
A) மங்கையர்க்கரசி B) ஜான்ஸிராணி
C) இராணி மங்கம்மாள் D) தடாதகைப் பிராட்டியார்

**விளக்கம் :** **விடை: (C)**
இராணி மங்கம்மாள் – நாயக்கர் மரபு
மங்கையர்க்கரசி – பாண்டிய மரபு
தடாதகைப் பிராட்டியார் – தெய்வ மரபு (மீனாட்சியம்மன்)
ஜான்ஸி ராணி – வடமத்தியப் பகுதியான ஜான்ஸி நாட்டு ராணி (இலட்சுமிபாய்)

**13. 'உலகின் எட்டாவது அதிசயம்' எனப் பாராட்டப்படுபவர்**
A) நைட்டிங்கேல் B) அன்னி சல்லிவான்
C) கெலன் கெல்லர் D) பாலி தாம்சன்

**விளக்கம் :** **விடை: (C)**
கெலன் கெல்லர் 19–ஆவது மாதக் குழந்தைப் பருவத்திலேயே கண், காது, வாய் என்ற மூன்று புலன்களையும் இழந்து விட்டார். உலகிலேயே மாற்றுத் திறனாளிகளில் முதல் பட்டம் பெற்றவர் இவரேயாவார். எனவே 'உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெறுகிறார்.

**14. திருக்குறளுக்கும் எந்த எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது?**
A) 9 B) 7
C) 10 D) 133

**விளக்கம் :** **விடை: (B)**
திருக்குறள் 'ஏழு' சீர்களால் அமைந்த குறள்வெண்பாக்களை உடையது. 'ஏழு' என்னும் எண்ணுப்பெயர் எட்டுக் குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது.
அதிகாரங்கள் 133 $\rightarrow$ 1 + 3 + 3 = 7
குறட்பாக்கள் 1330 $\rightarrow$ 1 + 3 + 3 + 0 = 7

**15. தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இடம் பெறும் நூல் எது?**
A) குறிஞ்சிப் பாட்டு B) முல்லைப் பாட்டு
C) கலிப்பாடல் D) பரிபாடல்

**விளக்கம் :** **விடை: (A)**
**குறிஞ்சிப்பாட்டு:** பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். ஆரிய அரசன் பிரகத்தத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது. இந்நூலில் செங்காந்தள் தொடங்கி மலை எருக்கம்பூ வரை 99 பூக்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

**16. 'மனித நாகரிகத்தின் தொட்டில்' என அழைக்கப்படுவது எது?**
A) ஆப்பிரிக்கா B) இலெமூரியா
C) சிந்து சமவெளி D) ஹரப்பா

**விளக்கம் :** **விடை: (B)**
கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ் குமரிக்கண்டமே இலெமூரியா கண்டமாகும். இது 'மனித நாகரிகத்தின் தொட்டில்' என அழைக்கப்படுகிறது. முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியா கண்டமானது, குமரிமுனைக்குத் தெற்கே விரிந்து குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கியிருந்தது. '

**'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள''** – சிலப்பதிகாரம்.

**17. குமரகுருபரர் எழுதாத நூல்**
A) கந்தர் கலிவெண்பா
B) மதுரைக் கலம்பகம்
C) திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்
D) நீதிநெறிவிளக்கம்

**விளக்கம் :** **விடை: (C)**
திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் – பகழிக் கூத்தரால் 15–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலாகும்.

**18. தாயுமானவர் நினைவு இல்லம் எந்த மாவட்டத்தில் உள்ளது?**
A) தஞ்சாவூர் B) நாகப்பட்டினம்
C) இராமநாதபுரம் D) புதுக்கோட்டை

**விளக்கம் :** **விடை: (C)**
இராமநாதபுரம் மாவட்டத்தில் 'இலட்சுமிபுரம்' என்ற ஊரில் தாயுமானவர் நினைவு இல்லம் உள்ளது. அந்த இடத்தில்தான் அவர் இயற்கை எய்தினார்.

**19. தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வொர்த்' என்று புகழப்படுபவர்**
A) வாணிதாசன் B) வண்ணதாசன்
C) பாரதிதாசன் D) சுப்புரத்தின தாசன்

**விளக்கம் :** **விடை: (A)**
**வாணிதாசனின் சிறப்புப் பெயர்கள் :**
கவிஞரேறு, பாவலர் மணி, தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்'.

**20. குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் ................ உயிர்வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.**
A) குளோரோ ஃபுளுரோ கார்பன்
B) ஈத்தேன்
C) கதிரியக்கம்
D) மீத்தேன் **விடை: (A)**

**21. 'திராவிடம்' என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர்**
A) பெரியார் B) குமரிலபட்டர்
C) கால்டுவெல் D) ஜி.யூ. போப்

**விளக்கம் :** **விடை: (B)**
'திராவிடம்' என்ற சொல்லை முதன் முதலில் உருவாக்கியவர் 'குமரிலபட்டர்'. அதனைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் 'கால்டுவெல்'.

**22. 'சீர்திருத்தக் காப்பியம்' என்று பாராட்டப்படுவது**
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) வளையாபதி D) குண்டலகேசி

**விளக்கம் :** **விடை: (B)**
**மணிமேகலையின் வேறுபெயர்கள் :**
'மணிமேகலைத் துறவு, அறக்காப்பியம், சீர்திருத்தக் காப்பியம், குறிக்கோள் காப்பியம், முதல் சமயக் காப்பியம், புரட்சிக் காப்பியம், பசிப்பிணி மருத்துவக் காப்பியம், சமயக்கலைச் சொல்லாக்கக் காப்பியம், கதை களஞ்சியக் காப்பியம்.

**23. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?**
A) நற்றிணை, கலித்தொகை
B) பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி
C) குறுந்தொகை, ஐங்குறுநூறு
D) பரிபாடல், மலைபடுகடாம்

**விளக்கம் :** **விடை: (B)**
பழந்தமிழகத்தின் வணிகப் பொருள்கள் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும், மதுரைக் காஞ்சியிலும் காணப்படுகின்றன.

SURA'S

**ஏற்றுமதியான பொருட்கள் :** இரத்தினம், வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலானவை.

**இறக்குமதியான பொருட்கள் :** சீனத்துப் பட்டு, சர்க்கரை முதலானவை. அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கரும்பு கொண்டு வரப்பட்டு பயிர் செய்யப்பட்டது.

**24. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியைக் கூறும் நூல்**

A) பெருங்கதை B) குண்டலகேசி

C) நாககுமார காவியம் D) மணிமேகலை

**விளக்கம் :** **விடை: (D)**

மணிமேகலையில், சுதமதியின் தந்தையின் சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரி செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து பண்டைத் தமிழர் அறுவை மருத்துவத்தில் சிறந்து விளங்கியவை குறித்து அறிய முடிகிறது.

**25. பொருத்துக:**

a. நான்மணிமாலை 1. கவிதை

b. மலரும் மாலையும் 2. சிற்றிலக்கியம்

c. நான்மணிக்கடிகை 3. காப்பியம்

d. தேம்பாவணி 4. நீதிநூல்

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 3 | 4 | 2 | 1 |

**விளக்கம் :** **விடை: (A)**

நான்மணிமாலை – 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

மலரும் மாலையும் – கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் கவிதை நூலாகும்.

நான்மணிக்கடிகை – பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள 11 நீதி நூல்களுள் ஒன்றாகும்.

தேம்பாவணி – காப்பிய வகை நூலாகும்.

**26. 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' – யார் கூற்று?**

A) பாரதியார் B) பாரதிதாசன்

C) கண்ணதாசன் D) முடியரசன் **விடை: (B)**

**27. கூடுகட்டி வாழும் பாம்பு எது?**

A) நல்ல பாம்பு B) இராஜ நாகம்

C) பச்சைப் பாம்பு D) எதுவுமில்லை

**விளக்கம் :** **விடை: (B)**

**இராஜநாகம் :** இந்தியாவில் உள்ள இராஜநாகம் உலகிலேயே நஞ்சுமிக்க மிக நீளமான பாம்பாகும். 15 அடி நீளமுடையது. கூடுகட்டி வாழும் ஒரே வகைப் பாம்பு இது. இராஜநாகம், மற்றப் பாம்புகளையும் கூட உணவாக்கிக் கொள்ளும்.

**28. மணிமேகலையில் விருச்சிக முனிவரால் பசிநோய் சாபம் பெற்றவள் யார்?**

A) சுதமதி B) மணிமேகலை

C) ஆதிரை D) காயசண்டிகை

**விளக்கம் :** **விடை: (D)**

காயசண்டிகை பசிநோய் சாபம் பெற்றவள். அவள் சாபம் மணிமேகலையால் நீங்குகிறது. மணிமேகலையின் அட்சயப் பாத்திரத்தில் கற்புக்கரசியான ஆதிரைதான் முதன்முதலில் பிச்சையிட்டாள். ஆதிரையிடம் முதன்முதலில் பிச்சையேற்குமாறு மணிமேகலையிடம் காயசண்டிகைதான் கூறுகிறாள். மணிமேகலையின் தோழி சுதமதி.

**29. 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' என்னும் புகழ்மிக்க நகரம்?**

A) மதுரை B) ஊட்டி

C) கொடைக்கானல் D) ஏற்காடு

**விளக்கம் :** **விடை: (A)**

பழம் பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்ததால் மதுரை 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' எனப்படுகிறது.

மதுரையின் வேறுபெயர்கள் : தூங்கா நகர், திருவிழா நகர், கோயில் மாநகர், தமிழ்கெழு கூடல், நான்மாடக்கூடல், ஆலவாய்.

**30. 'சதகம்' என்பது ................. பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.**

A) ஐம்பது B) நூறு

C) ஆயிரம் D) பத்தாயிரம் **விடை: (B)**

**31. "கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்...." —இவ் அடி மூலம் அனுமன் பெற்ற புகழ்ப்பெயர்**

A) சொல்லின் நாயகன் B) சொல்லின் தலைவன்

C) சொல்லின் புலவன் D) சொல்லின் செல்வன்

**விடை: (D)**

**32. 'சிங்கங்களே! எழுந்து வாருங்கள், நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள்' எனக் கூறியவர்–**

A) பாரதிதாசன் B) விவேகானந்தர்

C) சுபாஷ் சந்திரபோஸ் D) திலகர் **விடை: (B)**

**33. 'சொல்லாதன இல்லை பொதுமறையான திருக்குறளில்' – இவ்வடியைப் பாடியவர்**

A) பாரதியார் B) பாரதிதாசன்

C) கவிமணி D) சுரதா

**விளக்கம் :** **விடை: (B)**

**வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்த வற்றுள்**
**பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினிலே அழைத்துச்**
**சொல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்**
**இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே**

– பாரதிதாசன்.

**34. பொருத்தமான விடையை எழுதுக: 'துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்'–**

A) அந்தகக் கவி B) இராமச்சந்திர கவிராயர்

C) திருவள்ளுவர் D) உடுமலை நாராயணக் கவி

**விடை: (B)**

**35. 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' – என்று கூறியவர்**

A) ஒக்கூர் மாசாத்தியார் B) பொன்முடியார்

C) காவற்பெண்டு D) ஔவையார்

**விளக்கம் :** **விடை: (B)**

**ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல் வடித்துக் கொடுத்தல்**
**கொல்லற்குக் கடனே;**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,**
**ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.**

– புறநானூறு –312 ஆவது பாடல் ஆசிரியர் – பொன்முடியார்.

**36. அழுது அடியடைந்த அன்பர் ....................**

A) மாணிக்கவாசகர் B) வாகீசர்

C) சரபேசர் D) மதுரேசர்

**விளக்கம் :** **விடை: (A)**

மாணிக்கவாசகர், இறைவனை மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கி அழுது தொழுதவர். அதனால் இவரை 'அழுது அடியடைந்த அன்பர்' என்பர்.

**37. மறைமலை அடிகள் தாம் நடத்தி வந்த 'ஞானசாகரம்' இதழைத் தூய தமிழில் எங்ஙனம் பெயர் மாற்றம் செய்தார்?**

A) ஞானக் கடல் B) அறிவுக் கடல்

C) அறிவு சாகரம் D) நாணக் கடல்

**விளக்கம் :** **விடை: (B)**

ஞானம் – அறிவு ; சாகரம் – கடல் ; ஞானசாகரம் – அறிவுக்கடல். மறைமலையடிகள் தாம் நடத்தி வந்த ஞானசாகரம் என்ற திங்களிதழை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்தார். இந்த இதழ் 1902–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**38. 'ஜல்லிக்கட்டு' என்னும் எருதாட்டத்தை வைத்து 'வாடிவாசல்' எனும் நாவலை எழுதியவர்............**

**A)** சி.சு. செல்லப்பா **B)** பி.எஸ். ராமையா
**C)** திரு.வி.க. **D)** வ.வே.சு. ஐயர்

**விளக்கம் :** **விடை: (A)**

'வாடிவாசல்' என்பது 'ஜல்லிக்கட்டு' என்ற வீர விளையாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட குறுநாவலாகும். இந்நூலின் ஆசிரியர் சி.சு. செல்லப்பா ஆவார். இவர் 'எழுத்து' என்ற பத்திரிகையை நடத்தியவராவார்.

**39. திருமணம் செல்வக் கேசவராய முதலியார் தமிழின் எப்பிரிவுக்கு மிகவும் தொண்டு செய்தார்?**

**A)** செய்யுள் **B)** உரைநடை
**C)** இலக்கணம் **D)** நாடகம்

**விளக்கம் :** **விடை: (B)**

திருமணம் செல்வக் கேசவராயர் தமிழ் உரைநடைக்குப் பெரும் பங்காற்றியவர். இவர் 'தமிழ் உரைநடைச் சிற்பி' என அழைக்கப்பட்டார். "தமிழுக்குக் கதி எனப்படுபவை கம்பராமாயணமும் திருக்குறளும் ஆகும்" என்று இவர் கூறியுள்ளார்.

**40. 'தமிழ் உரைநடையின் தந்தை' என மெச்சத் தகுந்தவர்**

**A)** யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர்
**B)** சி.வை. தாமோதரம் பிள்ளை
**C)** விபுலானந்த அடிகள்
**D)** கனகசபைப் புலவர்

**விளக்கம் :** **விடை: (A)**

தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய ஆறுமுக நாவலரை, பரிதிமாற் கலைஞர் **'வசனநடை கைவந்த வல்லாளர்'** எனப் போற்றினார். இவருடைய சொற்பொழிவின் திறமையைக் கண்டு திருவாவடுதுறை ஆதினத்தார் இவருக்கு **'நாவலர்'** என்ற பட்டத்தை வழங்கினார்.

**41. 'முத்தொள்ளாயிரம்' – இவர்களைப் பற்றிய புகழ்ப் பாடல்கள்**

**A)** சேர, சோழ, பாண்டியர்
**B)** பல்லவர், நாயக்கர், பாளையக்காரர்
**C)** முகமதியர், ஆங்கிலேயர், மராட்டியர்
**D)** குப்தர், மௌரியர், டச்சுக்காரர்

**விளக்கம் :** **விடை: (A)**

**முத்தொள்ளாயிரம் :** இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியரைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டது. ஆயினும் 130 பாடல்களே கிடைத்துள்ளன.

**42. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| a. | சிக்கனம் | 1. | கவிஞர் தாராபாரதி |
| b. | மனிதநேயம் | 2. | ஆலந்தூர் கோ.மோகனரங்கம் |
| c. | காடு | 3. | சுரதா |
| d. | வேலைகளல்ல வேள்விகளே | 4. | வாணிதாசன் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

**விடை: (C)**

**43. 'மணிமேகலை வெண்பா' வின் ஆசிரியர் யார்?**

**A)** பாரதியார் **B)** பாரதிதாசன்
**C)** திரு.வி.க. **D)** கவிமணி **விடை: (B)**

**44. 1942–இல் பர்மாவிலிருந்து புறப்பட்டு இந்தியா வந்து சேர்ந்ததை விவரிக்கும் மிகச் சிறந்த பயண நூலான 'பர்மா வழி நடைப்பயணம்' நூலின் ஆசிரியர்**

**A)** வைத்தியநாத சர்மா **B)** வெ. சாமிநாத சர்மா
**C)** தேவன் **D)** அநுத்தமா

**விளக்கம் :** **விடை: (B)**

**வெ. சாமிநாத சர்மா**

**காலம்** : செப்டம்பர் **17, 1895** முதல் ஜூலை **1, 1978** வரை.

**சிறப்புகள்** : பன்மொழி அறிஞர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், அறிவியல் தமிழின் முன்னோடி.

**ஊர்** : வெங்களத்தூர். (திருவண்ணாமலை மாவட்டம்)

கதைகள், நாடகங்கள், அரசியல் கட்டுரைகள், வரலாற்று நூல்கள், வாழ்க்கை வரலாறுகள், பயணக் கட்டுரைகள் என 80–க்கும் மேற்பட்ட படைப்புகளுக்குச் சொந்தக்காரர். அவற்றுள் ஒன்றுதான் 'பர்மா வழி நடைப்பயணம்' ஆகும்.

**45. 'ஆனந்தத்தேன்' நூலின் ஆசிரியர்**

**A)** வைரமுத்து **B)** தமிழன்பன்
**C)** புதுமைப்பித்தன் **D)** க. சச்சிதானந்தன்

**விளக்கம் :** **விடை: (D)**

ஆனந்தத்தேன், அன்னபூரணி, தமிழ்ப்பசி ஆகியவை க. சச்சிதானந்தன் அவர்களின் படைப்புகளாகும். இவர் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

**46. அடைமொழிக்குரிய ஆசிரியர்களைத் தேர்க.**

| | | | |
|---|---|---|---|
| a. | விடுதலைக்கவி | 1. | அப்துல் ரகுமான் |
| b. | திவ்வியகவி | 2. | வாணிதாசன் |
| c. | கவிஞரேறு | 3. | பாரதியார் |
| d. | கவிக்கோ | 4. | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**விடை: (C)**

**47. பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| a. | பூங்கொடி | 1. | கண்ணதாசன் |
| b. | கொடிமுல்லை | 2. | சுரதா |
| c. | ஆட்டனத்தி ஆதிமந்தி | 3. | முடியரசன் |
| d. | பட்டத்தரசி | 4. | வாணிதாசன் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**விடை: (C)**

**48. வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலை இயற்றியவர் ............**

**A)** திருமங்கையாழ்வார் **B)** திருமழிசையாழ்வார்
**C)** குலசேகராழ்வார் **D)** நம்மாழ்வார்

**விளக்கம் :** **விடை: (C)**

**குலசேகர ஆழ்வார் :** இவர் சேர நாட்டில் திருவஞ்சைக்களத்தில் மன்னர் குலத்தில் தோன்றியவர். இவர் தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவர். வடமொழியில் 'முகுந்தமாலை' என்னும் நூலினைப் படைத்துள்ளார். தமிழில் இவர் எழுதிய பாசுரங்கள் 'பெருமாள் திருமொழி' என அழைக்கப்படுகிறது. அவை மொத்தம் 105 பாடல்களாகும்.

**49. 'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' என்ற வரிகள் இடம் பெற்ற நூல்**

**A)** மணிமேகலை **B)** சிலப்பதிகாரம்
**C)** சீவகசிந்தாமணி **D)** பெரியபுராணம்

# TNPSC VAO

மதிப்பெண் : 300
நேரம் : 3 மணி

## ஒரிஜினல் வினாத்தாள் 2011

## பொதுத்தமிழ்

**1. இடியோசை கேட்ட நாகம் போல – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்:**
A) மகிழ்ச்சி B) அச்சம்
C) சிறப்பு D) இறப்பு

**2. அனலில் விழுந்த புழு போல – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்:**
A) துன்பம் B) ஆறாத்துயரம்
C) மகிழ்ச்சி D) சிறுமை

**3. தாமரை இலைத் தண்ணீர் போல – உவமையால் விளக்கபெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்:**
A) பற்று B) சிறப்பு
C) மேன்மை D) பற்று அற்று இருத்தல்

**4. அச்சில் வார்த்தாற் போல – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்:**
A) பொய்யானது B) உண்மைத் தன்மை
C) கடுமையானது D) வலிமையற்றது

**5. நின்றனன் அவ்வழி நிகழ்ந்த தென்னெனில் – துன்றுபூஞ் சோலைவாய் அரக்கன் – சீர்மோனையைச் சுட்டுக.**
A) நின்றனன் - அவ்வழி
B) நிகழ்ந்த - தென்னெனில்
C) நின்றனன் - நிகழ்ந்த
D) நிகழ்ந்த - சோலைவாய்

**6. பாரத பூமி பழம்பெரும் பூமி**
**நீரதன் புதல்வர் இந் நினைவகற் றாதீர்! – சீர்மோனையைச் சுட்டுக.**
A) பாரதபூமி - பழம்பெரும்
B) பழம்பெரும் - பாரதபூமி
C) நீரதன் - புதல்வர்
D) புதல்வர் - நினைவகற்

**7. பனித்த சடையும் பவளம் போல்**
**மேனியிற்பால் வெண்ணீறும் – அடி எதுகையைச் சுட்டுக.**
A) பனித்த - மேனியிற்பால்
B) பனித்த - பவளம்
C) சடையும் - பவளம்
D) பனித்த - சடையும்

**8. பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் – மோனையைத் தேர்க.**
A) பொன்புனை - ளாடும்
B) பொன்புனை - பொற்கழல்
C) மன்று - ளாடும்
D) மன்று - பொற்கழல்

**9. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் – இயைபினைக் கண்டறிக.**
A) துப்பார்க்குத் - துப்பாய
B) துப்பார்க்குத் - துப்பார்க்குத்
C) துப்பார்க்குத் - துப்பாக்கி
D) துப்பாய - துப்பார்க்கு

**10. பிரித்து எழுதுக : கொங்கலர்தார்**
A) கொங்கலர் + தார் B) கொ + கலர்தார்
C) கொங்கு + அலர் + தார் D) கொங்க + அலர்தார்

**11. 'உழவர் நிலத்தை உழுது, விதை விதைத்து, நீர் பாய்ச்சி, உரமிட்டு அறுவடை செய்தார்' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.**
A) தொடர் வாக்கியம் B) கலவை வாக்கியம்
C) தனி வாக்கியம் D) செய்தி வாக்கியம்

**12. 'நான் இலக்கணம் படித்தேன்' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.**
A) தொடர் வாக்கியம் B) கலவை வாக்கியம்
C) எதிர்மறை வாக்கியம் D) செய்தி வாக்கியம்

**13. 'பாரதிக்கு பாரத நாட்டின் மேல் மிகுந்த பற்று' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.**
A) செய்தி வாக்கியம் B) கலவை வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்

**14. 'பாண்டியர்கள் முத்தமிழ் வளர்த்தனர்' – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.**
A) செயப்பாட்டுவினை வாக்கியம்
B) செய்வினை வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம்
D) தனி வாக்கியம்

**15. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.**
A) கந்தன் மரம் வெட்டினான்
B) கந்தன் மரம் வெட்டுவித்தான்
C) கந்தன் மரம் வெட்டியது
D) மரம் கந்தனால் வெட்டப்பட்டது

**16. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.**
A) சேமித்தனர் மக்கள் மழைநீரை
B) மக்களால் மழைநீர் சேமிக்கப்பட்டது
C) மழைநீரை மக்கள் சேமித்தனர்
D) மக்கள் சேமித்தனர் மழைநீரை

**17. செயப்பாட்டுவினை சொற்றொடரைக் கண்டறிக.**
A) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
B) சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றினார்.
C) இயற்றினார் சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள்.
D) இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது.

**18. பிறவினைத் தொடரைக் கண்டறிக.**
A) மாதவி நடனம் கற்றாள்
B) நடனம் மாதவி கற்றாள்
C) கற்றாள் நடனம் மாதவி
D) மாதவி நடனம் கற்பித்தாள்

**19. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.**
A) புதியதோர் உலகம் செய்விப்போம்
B) உலகம் புதியதோர் செய்வோம்
C) செய்வோம் புதியதோர் உலகம்
D) புதியதோர் உலகம் செய்வோம்

**20. 'மலரும் மணமும் போல – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்.**
A) ஒற்றுமை B) வேற்றுமை
C) துன்பம் D) புகழ்

**21. தடங்கண் – என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.**
A) உரிச்சொற்றொடர் B) உருவகம்
C) வினைத்தொகை D) அடுக்குத்தொடர்

SURA'S

**22. செடி கொடிகள் – என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.**
A) உம்மைத்தொகை B) அடுக்குத்தொடர்
C) எண்ணும்மை D) இரட்டைக்கிளவி

**23. 'மாநிதி' – என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.**
A) உரிச்சொற்றொடர் B) தொழிற்பெயர்
C) உவமைத்தொடர் D) வேற்றுமைத்தொடர்

**24. 'மென்மேலும்' – என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.**
A) இரட்டைக்கிளவி B) அடுக்குத்தொடர்
C) விளித்தொடர் D) உவமைத்தொடர்

**25. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்கவும்.**
இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும்.
A) இல்வாழ்க்கை வளர்வது எதனால்?
B) வளர்பிறை போல் உயர்வது எது?
C) இல்வாழ்க்கை வளரக் காரணம் என்ன?
D) இல்வாழ்க்கை எவ்வாறு வளர வேண்டும்?

**26. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்கவும்.**
**'கலிங்கத்துப்பரணி முதற் குலோத்துங்க சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது!**
A) கலிங்கத்துப்பரணி யாரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது?
B) கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?
C) முதல் குலோத்துங்க சோழனைப் பாடிய நூல் எது?
D) கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கியமா?

**27. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்கவும்.**
**இளமை கல்விக்குரியது.**
A) இளமையில் என்ன செய்ய வேண்டும்?
B) கல்வியை எப்பருவத்தில் கற்க வேண்டும்?
C) இளமை எதற்குரியது?
D) கல்வி கற்கும் பருவம் யாது?

**28. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்கவும்.**
**ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொருத்தே அமையும்.**
A) நாடு முன்னேற்றம் அடையக் காரணமென்ன?
B) ஒரு நாட்டின் முன்னேற்றம் எதைப் பொருத்து அமையும்?
C) நாடு எவ்வாறு இருக்க வேண்டும்?
D) நாட்டின் முன்னேற்றத்திற்கு மொழி அவசியமா?

**29. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்கவும்:**
**ஔவையார் ஆத்திசூடி பாடினார்.**
A) ஔவையார் எதனைப் பாடினார்?
B) ஆத்திசூடியைப் பாடியவர் யார்?
C) ஔவையார் பாடிய நூல்கள் யாவை?
D) ஔவையார் ஆத்திசூடியைப் பாடினாரா?

**30. 'அனந்தனுக்குக் காது ஏது? – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.**
A) உணர்ச்சி வாக்கியம் B) வினா வாக்கியம்
C) தொடர் வாக்கியம் D) தனி வாக்கியம்

**31. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.**
A) வேண்டும் சிந்தனை தமிழ் மொழியில் சிறக்க
B) சிந்தனை மொழியில் தமிழ் சிறக்க வேண்டும்
C) மொழியில் தமிழ் சிறக்க வேண்டும் சிந்தனை
D) தமிழ் மொழியில் சிந்தனை சிறக்க வேண்டும்.

**32. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.**
A) பரணியைக் கலிங்கத்துப் பாடியவர் செயங்கொண்டார்
B) கலிங்கத்துப்பரணியைப் பாடியவர் செயங்கொண்டார்
C) பாடியவர் செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியை
D) கலிங்கத்துப் பரணியைச் செயங்கொண்டார் பாடியவர்.

**33. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.**
A) வளமான வாழ்க்கைக்கு ஆதாரமாகும் நிலத்தடி நீர்.
B) வாழ்க்கைக்கு நிலத்தடி நீர் வளமான ஆதாரமாகும்.
C) நிலத்தடி நீர் வளமான வாழ்க்கைக்கு ஆதாரமாகும்.
D) ஆதாரமாகும் வாழ்க்கைக்கு வளமான நிலத்தடி நீர்.

**34. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.**
A) மழை பெய்வதற்கு முக்கியக் காரணிகள் மரம் செடி கொடிகள்
B) முக்கியக் காரணிகள் மரம் செடி கொடிகள் மழை பெய்வதற்கு
C) மரம் செடி கொடிகள் மழை பெய்வதற்கு முக்கியக் காரணிகள்
D) மழை பெய்வதற்கு மரம் செடி கொடிகள் முக்கியக் காரணிகள்

**35. 'அகலம்' – பெயர்ச்சொல்லின் வகை அறிக.**
A) பொருட்பெயர் B) பண்புப்பெயர்
C) சினைப்பெயர் D) இடப்பெயர்

**36. 'புளிப்பு' – பெயர்ச்சொல்லின் வகை அறிக.**
A) பொருட்பெயர் B) இடப்பெயர்
C) காலப்பெயர் D) பண்புப்பெயர்

**37. 'பந்து' – பெயர்ச்சொல்லின் வகை அறிக.**
A) காலப்பெயர் B) பொருட்பெயர்
C) சினைப்பெயர் D) இடப்பெயர்

**38. 'புத்தகம்' – பெயர்ச்சொல்லின் வகை அறிக.**
A) காலப்பெயர் B) தொழிற்பெயர்
C) பண்புப்பெயர் D) பொருட்பெயர்

**39. 'ஆண்டு' – பெயர்ச்சொல்லின் வகை அறிக.**
A) பொருட்பெயர் B) காலப்பெயர்
C) சினைப்பெயர் D) தொழிற்பெயர்

**40. 'கெழீஇய' – என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.**
A) வேற்றுமைத்தொடர் B) வினையெச்சத்தொடர்
C) சொல்லிசையளபெடை D) பண்புப்பெயர்

**41. 'படி' – என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக்கவும்.**
A) படித்த B) படித்தல்
C) படிக்க D) படித்தாள்

**42. 'வாழ்' – என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்.**
A) வாழ்ந்து B) வாழாதார்
C) வாழ்ந்த D) வாழ்தல்

**43. 'ஆற்று' – என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்.**
A) ஆற்றிய B) ஆற்றும்
C) ஆற்றுதல் D) ஆற்றாரும்

**44. 'வெல்' – என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்கவும்.**
A) வெல்லல் B) வென்ற
C) வென்று D) வெல்லும்

**45. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**
A) ஓசை, ஐவர், எருது, அன்பு
B) அன்பு, எருது, ஐவர், ஓசை
C) எருது, ஓசை, அன்பு, ஐவர்
D) ஐவர், அன்பு, ஓசை, எருது

**46. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**
A) வசை, வழக்கு, வாழ்வு, வானம்
B) வழக்கு, வசை, வானம், வாழ்வு
C) வாழ்வு, வழக்கு, வானம், வசை
D) வானம், வசை, வாழ்வு, வழக்கு

SURA'S
SURA'S

47. **அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**
 A) எட்டு, எருது, எழில், ஏணி
 B) எருது, எழில், எட்டு, ஏணி
 C) எழில், எட்டு, ஏணி, எருது
 D) ஏணி, எருது, எழில், எட்டு

48. **அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**
 A) முரசு, மலை, மூங்கில், மீதி
 B) மீதி, மலை, முரசு, மூங்கில்
 C) மலை, முரசு, மூங்கில், மீதி
 D) மலை, மீதி, முரசு, மூங்கில்

49. **அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.**
 A) ஔவை, ஓடம், ஒட்டகம், ஐந்து
 B) ஓடம், ஔவை, ஐந்து, ஒட்டகம்
 C) ஐந்து, ஒட்டகம், ஓடம், ஔவை
 D) ஒட்டகம், ஓடம், ஔவை, ஐந்து

50. **சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.**
 A) வகுத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம் பத்துப் பருவங்களாக.
 B) இலக்கியம் பிள்ளைத்தமிழ் என்னும் பத்துப் பருவங்களாக வகுத்துப்பாடுவது
 C) பத்துப் பருவங்களாக வகுத்துப்பாடுவது பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம்
 D) பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம் வகுத்துப் பாடுவது பத்துப் பருவங்களாக

51. **'புதைந்து' – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.**
 A) புதை  B) புதையல்
 C) புதைதல்  D) புதையும்

52. **'ஏத்தி' – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.**
 A) ஏத்திய  B) ஏத்த
 C) ஏத்தா  D) ஏத்து

53. **'தருக' – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.**
 A) தரு  B) தா
 C) தந்து  D) த

54. **'தழால்' – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.**
 A) தழுவி  B) தழு
 C) தழுவா  D) தழீ

55. **'பூ' – என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?**
 A) நிலவு  B) வானம்
 C) உலகம்  D) நீர்

56. **'ஏ' – என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?**
 A) வில்  B) வேல்
 C) கேடயம்  D) அம்பு

57. **'ஞா' – என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?**
 A) பொருத்து  B) மருந்து
 C) விருந்து  D) நடந்து

58. **'பா' – என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?**
 A) பாடல்  B) ஆடல்
 C) நாடல்  D) தேடல்

59. **'ம' – என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?**
 A) இந்திரன்  B) பீமன்
 C) இயமன்  D) நகுலன்

60. **'உணர்' – என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக்கவும்:**
 A) உணர்ச்சி  B) உணர்வான்
 C) உண்பான்  D) உண்ட

61. **Court : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தேர்ந்தெடுக்கவும்:**
 A) நகரமன்றம்  B) பாராளுமன்றம்
 C) நீதிமன்றம்  D) சட்டமன்றம்

62. **Complete : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்கவும்:**
 A) முழுமை  B) பழைமை
 C) முதுமை  D) இளமை

63. **Empty Vessel : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தேர்ந்தெடுக்கவும்:**
 A) வெற்றுப் பாத்திரம்  B) செம்புப் பாத்திரம்
 C) வெள்ளிப் பாத்திரம்  D) நீர் நிரம்பிய பாத்திரம்

64. **Publication : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தேர்ந்தெடுக்கவும்:**
 A) நூலகம்  B) பதிப்பகம்
 C) வெளியீடு  D) பொதுவிடம்

65. **Powerful : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் தேர்ந்தெடுக்கவும்:**
 A) சக்தியற்ற  B) வலியற்ற
 C) சக்திவாய்ந்த  D) வீரமற்ற

66. **ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.**

| | **பணி** | **பனி** |
|---|---|---|
| A) | நாளை | மார்கழி |
| B) | மாலை | பனிக்கட்டி |
| C) | காலை | தொழில் |
| D) | வேலை | குளிர் |

67. **ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.**

| | **என்** | **எண்** |
|---|---|---|
| A) | புவி | விண்மீன் |
| B) | ஆமை | வெப்பம் |
| C) | என்னுடைய | எண்ணிக்கை |
| D) | பார் | நீர் |

68. **ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.**

| | **உறு** | **உரு** |
|---|---|---|
| A) | மிகுதி | வடிவம் |
| B) | தகுதி | படிவம் |
| C) | விகுதி | கடினம் |
| D) | பகுதி | நளினம் |

69. **ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.**

| | **அளகு** | **அலகு** |
|---|---|---|
| A) | சேவல் | பக்கம் |
| B) | குரங்கு | நீளம் |
| C) | காட்டுக்கோழி | அளவைக்கூறு |
| D) | அகலம் | சோலை |

70. **'நகைத்தல் – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.**
 A) நகை  B) நகைய
 C) நகா  D) நகையா

71. **பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.**
 A) சிந்தாமணி  B) சிலப்பதிகாரம்
 C) பாஞ்சாலி சபதம்  D) மணிமேகலை

72. **பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.**
 A) சேரன்  B) இளங்கோவடிகள்
 C) சோழன்  D) பாண்டியன்

73. **பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.**
 A) வெட்சி  B) கரந்தை
 C) பாலை  D) நொச்சி

SURA'S

**74. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.**
A) வாழ்க B) வீழ்க
C) வெல்க D) நடந்த

**75. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.**
A) ஐயம் B) பூமி
C) புவி D) உலகம்

**76. ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்குக.**
A) அரசன் பரிசில் வழங்கினார்கள்
B) அரசன் பரிசில் வழங்கினான்
C) அரசர்கள் பரிசில் வழங்கியது
D) அரசர்கள் பரிசில் வழங்கினான்

**77. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்க.**
A) தமிழில் முதன்முதலாக சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாகத் தோன்றின.
B) தமிழில் முதன்முதலாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாக தோன்றின.
C) தமிழில் முதன்முதலாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாகத் தோன்றின.
D) தமிழில் முதன்முதலாக சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாக தோன்றின.

**78. 'Judge' – தமிழ்ச் சொல் தருக.**
A) நீதிமந்திரி B) வழக்கறிஞர்
C) நீதிபதி D) அரசு வழக்கறிஞர்

**79. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க.**
A) பிரதமரின் டி.வி. பேட்டி நாளை வரும்
B) பிரதமரின் தொலைக்காட்சி பேட்டி நாளை வரும்
C) பிரதமரின் டி.வி. நேர்காணல் நாளை வரும்
D) பிரதமரின் தொலைக்காட்சி நேர்காணல் நாளை வரும்

**80. வழூஉச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க.**
A) பூக்குவியலைப் படத்தின் அருகாமையில் வை
B) பூமாலையைப் படத்தின் அருகாமையில் வை
C) பூச்சரத்தை படத்தின் அருகாமையில் வை
D) பூவினை படத்தின் அருகாமையில் வை

**81. 'அப்பரடிகள்' – என்று அழைக்கப்படுபவர்**
A) சுந்தரர் B) மாணிக்கவாசகர்
C) நம்மாழ்வார் D) திருநாவுக்கரசர்

**82. பிரித்து எழுதுக : 'புறநானூறு'**
A) புற + நான்கு + நூறு B) புறம் + நான்கு + நூறு
C) புறநான்கு + நூறு D) புற + நானூறு

**83. பிரித்து எழுதுக : 'கிழங்கையகழ்ந்தெடுக்கும்'**
A) கிழங்கை + அகழ்ந்தெடுக்கும்
B) கிழங்கு + அகழ்ந்து + எடுக்கும்
C) கிழங்கை + அகழ்ந்து + எடுக்கும்
D) கிழங்ககழ்ந்து + எடுக்கும்

**84. பிரித்து எழுதுக : 'தனித்தமிழ்'**
A) தனித்து + அமிழ் B) தனி + தமிழ்
C) த + அனித்தமிழ் D) தனித்த + தமிழ்

**85. பிரித்து எழுதுக : 'நிற்பதொன்றில்'**
A) நிற்பது + ஒன்று + இல் B) நிற்ப + தொன்றில்
C) நிற்பதொன்று + இல் D) நிற்பது + ஒன்றில்

**86. எதிர்ச்சொல் தருக : 'வெகுளி'**
A) மகிழ்ச்சி B) அவலம்
C) அச்சம் D) துயரம்

**87. எதிர்ச்சொல் தருக : 'நல்வினை'**
A) தீயவை B) தீது
C) தீவினை D) நலமின்மை

**88. எதிர்ச்சொல் தருக : 'அகம்'**
A) புரம் B) மரம்
C) புறம் D) முடி

**89. எதிர்ச்சொல் தருக : 'அண்மை'**
A) சேய்மை B) அருகில்
C) நெருக்கம் D) பக்கத்தில்

**90. எதிர்ச்சொல் தருக : 'பெருமை'**
A) பொறுமை B) வறுமை
C) சிறுமை D) இன்மை

**91. பொருத்துக.**

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| 1) நாரைவிடுதூது | அ) நல்லாதனார் |
| 2) திரிகடுகம் | ஆ) செயங்கொண்டார் |
| 3) சீறாப்புராணம் | இ) சத்திமுத்தப் புலவர் |
| 4) கலிங்கத்துப்பரணி | ஈ) உமறுப்புலவர் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஆ | அ | ஈ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | இ | அ | ஈ | ஆ |
| D) | ஈ | இ | ஆ | அ |

**92. பொருத்துக.**

| சொல் | பொருள் |
|---|---|
| 1) கொண்டல் | அ) இரவு |
| 2) வளி | ஆ) கார்முகில் |
| 3) அல் | இ) பெருஞ்செல்வம் |
| 4) ஆக்கம் | ஈ) காற்று |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | இ | அ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | ஆ | ஈ | இ | அ |
| D) | அ | இ | ஈ | ஆ |

**93. பொருத்துக.**

| சொல் | பொருள் |
|---|---|
| 1) குருசு | அ) முடிவு |
| 2) ஒடுக்கம் | ஆ) வியப்பு |
| 3) முழவு | இ) சிலுவை |
| 4) இறும்பூது | ஈ) மத்தளம் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | ஆ | அ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | இ | அ | ஈ | ஆ |

**94. பொருத்துக.**

| சொல் | பொருள் |
|---|---|
| 1) மதுகரம் | அ) குற்றம் |
| 2) துன்று | ஆ) தேனீ |
| 3) புரை | இ) பேய் |
| 4) அலகை | ஈ) செறிவு |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | ஈ | அ | இ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | அ | இ | ஈ | ஆ |

**182.(B)** 5 பேர் = 120 நிமிடங்கள் ; 12 பேர் = $x$

$5 \times 120 = 12 \times x$ ; $600 = 12 \times x$

$x = \frac{600}{12} = 50$

12 பேர் 50 நிமிடங்களில் வேலையை செய்து முடிப்பார்கள்.

**183.(C)** A : B = 2 : 3, C : B = 3 : 4 B : C = 4 : 3

2 : 3 × 4
4 : 3 × 3

8 : 12 : 9

A : C = 8 : 9

**184.(A)** 30% × 40% × 560

$= \frac{30}{100} \times \frac{40}{100} \times 560 = \frac{6 \times 56}{5} = 67.2$

60% × 40% × 280

$= \frac{60}{100} \times \frac{40}{100} \times 280 = \frac{12 \times 28}{5} = 67.2$

**185. (B)** கோளத்தின் ஆரம் 50%

கோளத்தின் மேற்பரப்பு $= 4\pi r^2$

கோளத்தின் ஆரம் = 50% அதிகரித்தால் $= r + \frac{r}{2} = \frac{3r}{2}$

அதிகரிக்கும் கோளத்தின் மேற்பரப்பு $= 4 \times \pi \times \left(\frac{3r}{2}\right) \times \left(\frac{3r}{2}\right)$

$4 \times \pi \times \frac{9r^2}{4} = 9\pi r^2$

புதிதாக அதிகரித்த கோளத்தின் மேற்பரப்பு – கோளத்தின் மேற்பரப்பு

$9\pi r^2 - 4\pi r^2 = 5\pi r^2$

புதிதாக அதிகரிக்கும் கோளத்தின் மேற்பரப்பு விழுக்காடு

$\Rightarrow \frac{5\pi r^2}{4\pi r^2} \times 100 = \frac{5}{4} \times 100$

$\Rightarrow 5 \times 25 = 125\%$

**186. (B)** முக்கோணத்தின் பக்கங்களின் விகிதம் $\frac{1}{2} : \frac{1}{3} : \frac{1}{4}$

முக்கோணத்தின் சுற்றளவு = 104 செ.மீ.

$\frac{1}{2}x + \frac{1}{3}x + \frac{1}{4}x = 104$

$\frac{6x + 4x + 3x}{12} = 104$

$13x = 1248 \quad x = \frac{1248}{13} = 96$

முக்கோணத்தின் பக்கங்கள் $= \frac{x}{2} = \frac{96}{2} = 48$

$= \frac{x}{3} = \frac{96}{3} = 32$

$= \frac{x}{4} = \frac{96}{4} = 24$

முக்கோணத்தின் மிக அதிகமுள்ள பக்கத்தின் அளவு = 48

**189. (C)** முதல் எண் $x$ என்க.

இரண்டாவது எண் முதல் எண்ணின் இரு மடங்கு $= 2x$

இரண்டாவது எண் மூன்றாவது எண்ணின் மூன்று மடங்கு எனில்

மூன்றாவது எண் $\frac{2x}{3}$

$\frac{x + 2x + \frac{2x}{3}}{3} = 44$

$\frac{3x + 6x + 2x}{3} = 44 \times 3$

$11x = 44 \times 3 \times 3$

$x = \frac{44 \times 3 \times 3}{11} = 4 \times 3 \times 3 = 36$

முதல் எண் $x = 36$

இரண்டாவது எண் $\Rightarrow 2 \times 36 = 72$

மூன்றாவது எண் $\Rightarrow \frac{72}{3} = 24$

எனவே, மிகப்பெரிய எண் 72

**190. (B)** எட்டு எண்களின் சராசரி 14

இவற்றுள் 6 எண்களின் சராசரி 16

எட்டு எண்களின் கூட்டுத்தொகை = 14 ×8 = 112

6 எண்களின் கூட்டுத்தொகை = 16 ×6 = 96

மீதமுள்ள இரண்டு எண்களின் கூட்டுத்தொகை = 16

இரண்டு எண்களின் சராசரி $= \frac{16}{2} = 8$

# கூடுதல் தகவல்கள்

## தமிழ்நாட்டின் அமைவிடம் மற்றும் பரப்பளவு

✧ இந்தியாவின் பதினோராவது பெரிய மாநிலமாகும். இந்தியப் பரப்பில் சுமார் 4 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| நிலப்பரப்பு | 8°4' வட அட்சம் முதல் 13°35' வட அட்சம் வரை. 76°18' கிழக்குத் தீர்க்கம் முதல் 80°20' கிழக்குத் தீர்க்கம் வரை. |
| பரப்பளவு | 1,30,058 சதுரகிலோமீட்டர் |
| கிழக்குக் கோடி | கோடியக்கரை |
| மேற்குக் கோடி | ஆனைமலை |
| வடகோடி | பழவேற்காடு ஏரி |
| தென்கோடி | குமரிமுனை |

## எல்லைகளும் அண்டை மாநிலங்களும்

| | |
|---|---|
| கிழக்கு | வங்காள விரிகுடா |
| மேற்கு | கேரளா |
| வடக்கு | ஆந்திரப்பிரதேசம் |
| வடமேற்கு | கர்நாடகா |
| தெற்கு | இந்தியப் பெருங்கடல் |

## தமிழ்நாட்டில் அமைந்துள்ள முக்கிய மலைகள்

| மாவட்டம் | மலைகள் |
|---|---|
| கோயம்புத்தூர் | மருதமலை, வெள்ளியங்கிரி மற்றும் ஆனைமலை |
| தர்மபுரி | தீர்த்தமலை, சித்தேரி மற்றும் வத்தல் மலை |
| திண்டுக்கல் | பழனிமலை மற்றும் கொடைக்கானல் |
| ஈரோடு | சென்னிமலை மற்றும் சிவன்மலை |
| வேலூர் | ஜவ்வாது, ஏலகிரி மற்றும் இரத்தின மலை |
| நாமக்கல் | கொல்லிமலை |
| சேலம் | சேர்வராயன், கஞ்சன் மலை மற்றும் சுண்ணாம்புக் குன்றுகள் |
| விழுப்புரம் | கல்வராயன் மற்றும் செஞ்சிமலை |
| கன்னியாகுமரி | மருதுவாழ்மலை |
| திருநெல்வேலி | மகேந்திரகிரி மற்றும் அகத்தியர் மலை |
| நீலகிரி | நீலகிரி மலை |

## தமிழ்நாட்டிலுள்ள முக்கியத் தீவுகள்

✧ பாம்பன், முயல்தீவு, குருசடை, நல்லதண்ணி தீவு, புள்ளிவாசல், ஸ்ரீரங்கம், உப்புத்தண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் பாறை.

## தமிழ்நாட்டின் முக்கிய நீர்வீழ்ச்சிகள்

| மாவட்டங்கள் | நீர்வீழ்ச்சிகள் |
|---|---|
| தர்மபுரி | ஒகேனக்கல் |
| திருநெல்வேலி | கல்யாணதீர்த்தம் மற்றும் குற்றாலம் |
| தேனி | கும்பக்கரை மற்றும் சுருளி |
| நாமக்கல் | ஆகாயகங்கை |
| நீலகிரி | கேத்தரின், பைக்காரா |
| சேலம் | கிள்ளியூர் |
| விருதுநகர் | ஐயனார் |
| கோயம்புத்தூர் | வைதேகி, செங்குபதி, சிறுவாணி மற்றும் கோவை குற்றாலம் |
| திருப்பூர் | திருமூர்த்தி |
| மதுரை | குட்லாடம்பட்டி |
| கன்னியாகுமரி | திருப்பரப்பு, காளிகேசம், உலக்கை மற்றும் வட்டப்பாறை |

## பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு :

✧ இது, கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகே 1,100 ஹெக்டேர் பரப்பளவுடன் உலகின் இரண்டாவது மிகப்பெரிய சதுப்புநிலக் காடாக உள்ளது. வங்கக் கடலிலிருந்து மணல் திட்டுகளால் இக்காடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. இது **அவிசீனியா** மற்றும் **ரைசோபோரா** போன்ற தாவர வகைகளைக் கொண்டுள்ளது. அரியவகை கிளிஞ்சல்கள் மற்றும் துடுப்பு மீன்கள் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

## தமிழ்நாட்டில் அதிகளவு காடுகளைக் கொண்ட மாவட்டங்கள்

| மாவட்டம் | பரப்பளவு (சதுர கிலோமீட்டர்) |
|---|---|
| தர்மபுரி | 3,280 |
| கோயம்புத்தூர் | 2,627 |
| ஈரோடு | 2,427 |
| வேலூர் | 1,857 |
| நீலகிரி | 1,583 |
| திண்டுக்கல் | 1,662 |

## உயிர்க்கோளப் பெட்டகங்கள்

| வ.எண் | தமிழ்நாட்டிலுள்ள உயிர்க்கோளப் பெட்டகங்கள் |
|---|---|
| 1. | நீலகிரி உயிர்க்கோளப் பெட்டகம் |
| 2. | மன்னார் வளைகுடா உயிர்க்கோளப் பெட்டகம் |
| 3. | அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம் |

## புயலால் அதிகம் பாதிப்படையும் பகுதிகள்

| | |
|---|---|
| நாகப்பட்டினம், திருவள்ளூர், திருவாரூர் | வடமேற்குப் பகுதி நீங்கலாக |
| தஞ்சாவூர் | தென்பகுதி |
| புதுக்கோட்டை மாவட்டம் | கிழக்குப் பகுதிகள் |
| கடலூர் மாவட்டம் | கிழக்குப் பகுதிகள் |
| விழுப்புரம் மாவட்டம் | மத்தியப் பகுதிகள் |
| திருவண்ணாமலை மாவட்டம் | கிழக்குப் பகுதிகள் |
| காஞ்சிபுரம் மாவட்டம் | மேற்குப் பகுதிகள் |
| வேலூர் மாவட்டம் | வடகிழக்குப் பகுதிகள் |
| சென்னை | வடபகுதிகள் |

✧ தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் (TANU) கீழ் செயல்பட்டு வரும் **'தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம்'** (TRRI) நெல் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஓர் இந்திய நிறுவனமாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் **ஆடுதுறை** என்னுமிடத்தில் 1985–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது.

✧ இந்தியா, 2018–ஆம் ஆண்டை **தினைப் பயிர்களின் தேசிய ஆண்டாக** அனுசரித்தது. உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் (FAO), 2023–ஆம் ஆண்டை **சர்வதேச தினைப்பயிர்கள் ஆண்டாக** அனுசரிக்கத் தீர்மானித்துள்ளது.

SURA'S

✧ மத்திய அரசானது, **தேசிய இயற்கை கரிம வேளாண்மைத் திட்டத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது.

✧ **நோக்கம் :** இயற்கை வேளாண்மையை மேம்படுத்துவது.

✧ **செயல்பாடுகள் :** கரிமப் பொருள்களை மறுசுழற்சி செய்வது, உயிரி உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக் கொல்லிகளை உற்பத்தி செய்ய தொழிற்கூடங்களுக்கு மாநிலத்தில் நிதியுதவி அளித்தல், தரம் மேம்பாட்டு வளர்ச்சி மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் குழுமத்தின் மனிதவளத்தை மேம்படுத்துதல்.

## தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் (TANTEA)

✧ கருப்பு வகை தேயிலை உற்பத்தியிலும், கலப்பு வகை தேயிலை உற்பத்தியிலும் முன்னணி வகிக்கும் நிறுவனங்களுள் இதுவும் ஒன்றாகும். இதன் தேயிலை பயிரிடும் பரப்பளவு ஏறத்தாழ 4500 ஹெக்டேர் ஆகும்.

✧ தமிழ்நாடு பால் வளர்ச்சிக் கழகம் என்று நிறுவப்பட்ட அமைப்பானது 'தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்' என்ற புதிய அமைப்பாக பதிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது **ஆவின்** என்று அழைக்கப்படுகிறது.

**இயற்கை வேளாண்மையில் பயிர் சுழற்சி, பயிர் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள், விவசாயம் அல்லாத கரிமக் கழிவுகள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.**

## புவியியல் குறியீடு (GI Tag)

✧ இது, ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் தயாரிக்கும் பொருள்களின் மீது பயன்படுத்தப்படும் குறியீடு ஆகும். இது உற்பத்தியாளர்களுக்கு உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வழங்குகிறது.

**சில முக்கியப் புவியியல் குறியீடுகள்**

| இடம் | உற்பத்திப் பொருள்கள் |
|---|---|
| ஆரணி | பட்டு |
| காஞ்சிபுரம் | பட்டு |
| கோயம்புத்தூர் | மாவு அரைக்கும் இயந்திரம், கோரா பட்டுச்சேலை, தோல் பொருட்கள். |
| தஞ்சாவூர் | ஓவியங்கள், கலைநயம் மிக்க தட்டுகள், தலையாட்டி பொம்மைகள், வீணை, நெட்டி வேலைப்பாடு |
| நாகர்கோவில் | கோயில் நகைகள் |
| ஈரோடு | மஞ்சள் |
| சேலம் | வெண்பட்டு, மாம்பழம் |
| பவானி | போர்வைகள் |
| மதுரை | சுங்கடிச்சேலை, மல்லி |
| சுவாமிமலை | வெண்கலச் சிலைகள் |
| நாச்சியார் கோவில் | குத்துவிளக்கு |
| பத்தமடை | பாய் |
| நீலகிரி | பாரம்பரிய பூத்தையல், தேயிலை |
| மகாபலிபுரம் | சிற்பங்கள் |
| சிறுமலை | மலை வாழை |
| ஏத்தோமொழி | தேங்காய் |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | பால்கோவா |
| திண்டுக்கல் | பூட்டு |
| கோவில்பட்டி | கடலைமிட்டாய் |
| கொடைக்கானல் | மலைப்பூண்டு |
| பழனி | பஞ்சாமிர்தம் |
| காரைக்குடி | கண்டாங்கி சேலை |
| அரும்பாவூர் | மர சிற்பம் |
| செட்டிநாடு | அரண்மனை |
| தூத்துக்குடி | மக்ரூன் |
| திருநெல்வேலி | அல்வா |

## இந்திய நதிகள்

| பெயர் | நீளம் கி.மீ. | பரப்பு ச.கி.மீ. | ஆற்றின் பிறப்பிடம் | கலக்குமிடம் | பயனடையும் பகுதி |
|---|---|---|---|---|---|
| சிந்து | 3100 | 3,21,290 | பொக்கா–சூ பனியாறு | அரபிக்கடல் | இந்தியா,பாகிஸ்தான் |
| கங்கை | 2480 | 3,37,000 | கங்கோத்ரி | வங்காளவிரிகுடா | உத்திரப்பிரதேசம், பீகார், மேற்குவங்கம் |
| யமுனை | 1379 | 3,59,000 | யமுனோத்ரி | வங்காள விரிகுடா | டெல்லி, ஹரியானா, உத்திரப்பிரதேசம் |
| பிரம்மபுத்ரா | 725 | 2,40,000 | கெமாயுங்டங் பனியாறு (மானசரோவர் ஏரி) | வங்காளவிரிகுடா | வடகிழக்கு மாநிலங்கள் |
| காவிரி | 800 | 67,000 | குடகுமலை | வங்காளவிரிகுடா | கர்நாடகம், தமிழ்நாடு |
| கோதாவரி | 1465 | 3,12,812 | நாசிக் குன்றுகள் | வங்காளவிரிகுடா | ஆந்திரப்பிரதேசம், தென்கிழக்குப் பகுதி, ஒடிஷா |
| கிருஷ்ணா | 1450 | 2,50,000 | மகாபாலேஸ்வர் மலை | வங்காளவிரிகுடா | மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் |
| நர்மதை | 1312 | 93,786 | அமர்கண்டாக் மலை | அரபிக்கடல் | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா |
| தபதி | 724 | 65,145 | பெட்டுல் | அரபிக்கடல் | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா |
| மகாநதி | 854 | 1,41,600 | அமர்கண்டா பீடபூமி | வங்காளவிரிகுடா | சட்டீஸ்கர், ஜார்கண்ட், ஒடிஷா |
| வைகை | 240 | 7000 | மேற்குதொடர்ச்சி மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு |
| பெரியாறு | 244 | 5,388 | கார்பன் மலை | அரபிக்கடல் | தமிழ்நாடு, கேரளா |
| தாமிரபரணி | 129 | 4400 | அகத்தியர் மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு |

## பயிர்களின் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலை

| பயிர் | வெப்பநிலை | மழைப்பொழிவு | மண்வகை |
|---|---|---|---|
| நெல் | 24°C | 150 செ.மீ | வண்டல் மண்(அயன மண்டல பயிர்) |
| கோதுமை | 15°C | 50-60 செ.மீ வரை | களிமண் அல்லது வண்டல் கலந்த களிமண்(மித வெப்பமண்டல பயிராகும்) |
| பருத்தி | 20-30°C | 50-100 செ.மீ வரை | கரிசல்மண் மற்றும் வண்டல் மண் (அயன மற்றும் துணை அயன இழைப் பயிராகும்) |
| கரும்பு | 24°C | 130 செ.மீ | ஈரப்பதத்தினை தக்கவைக்கும் அனைத்துவகை மண்களும் (அயன மண்டல புல்வகைத் தாவரம்) |
| சோளம் | 16°C க்கும் அதிகமான வெப்பநிலை | 100 செ.மீ | பெரும்பாலான மண்வகைகள் |
| சணல் | 30°C | 150 செ.மீ | வண்டல் மண் |
| கம்பு | 25-30°C | 40-50 செ.மீ | மணல்கலந்த மட்கிய செம்மண் மற்றும் கரிசல் மண் |
| கேழ்வரகு | 20-30°C | 50-100 செ.மீ | செம்மண், மட்கிய மணல் கலந்த கரிசல் மண் |
| பருப்பு வகைகள் | 20-25°C | 50-75 செ.மீ | வறண்ட லேசான மண் |
| தேயிலை | 21°C | 150 செ.மீ | மலைச்சரிவுகளிலேயே பயிரிடப்படுகிறது. நல்ல வடிகால்களைக் கொண்ட இலை தழைகள் மட்கிய வளமான மண் |
| காபி | 15-28°C | 150-200 செ.மீ | மலைச்சரிவுகளிலேயே பயிரிடப்படுகிறது. நல்ல வடிகால்களைக் கொண்ட இலை தழைகள் மட்கிய வளமான மண் |
| இரப்பர் | 25-35°C | 150-200 செ.மீ | வளமான நல்ல வடிகால் வசதிகளை கொண்ட மண். |
| புகையிலை | 16-40°C | 50-100 செ.மீ | நல்ல வடிகாலமைப்பைக் கொண்ட வண்டல் அல்லது கரிசல் மண். |

## இந்தியாவின் முதன்மையான மண்வளங்கள்

| மண்வகை | சதவிகிதம் (மொத்த நிலப்பரப்பில்) | பரவலாக காணப்படுமிடங்கள் | விளையும் பயிர்கள் |
|---|---|---|---|
| வண்டல் மண் | 45.6% (15 லட்சம் ச.கி.மீ.) | கங்கை–பிரம்மபுத்ரா ஆற்றுச்சமவெளிகள் | நெல், கோதுமை, பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள், சணல் (கங்கை–பிரம்மபுத்ரா பகுதி) |
| கரிசல் மண் | 16.6% (5.46 லட்சம் ச.கி.மீ.) | கோதாவரி, நர்மதா – தபதி ஆற்றுப்பள்ளத்தாக்கு குஜராத் மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம், தென் தமிழகம் | எள், நெல், கோதுமை, பருத்தி, சோளம், தினைவகை, புகையிலை, எண்ணெய் வித்துகளில் குறிப்பாக கடுகு, சூரியகாந்தி, பழங்கள் மற்றும் காய்கறிகள் |
| செம்மண் | 10.6% (3.5 லட்சம் ச.கி.மீ.) | தமிழகத்தின் பெரும்பகுதி, கர்நாடகாவின் தென் பகுதி, கோவா, வடகிழக்கு ஆந்திரம், ஒடிஸா, கிழக்கு இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம். | கோதுமை, நெல், பருத்தி, கரும்பு, பருப்புவகைகள், பூச்செடிகள் |
| சரளை (அ) துருக்கல் மண் | 8.3% (2.48 லட்சம் ச.கி.மீ.) | ஆந்திரப்பிரதேசம், தமிழகம், கர்நாடகம், அஸ்ஸாம், ஒடிசா, கேரளா, கிழக்குத் தொடர்ச்சிமலையின் உச்சிகள். | காப்பி, இரப்பர், முந்திரி, மரவள்ளி |
| மலை மண் | 8.67% (2.85 லட்சம் ச.கி.மீ.) | வடமேற்கு இந்தியாவின் சில பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலை, இமாச்சல், சிவாலிக் மலைதொடர் மேற்கு வங்கம், அஸ்ஸாம். | தேயிலை, காப்பி, இரப்பர் தேயிலை உற்பத்தியில் அஸ்ஸாமும், மேற்கு வங்கமும் முதலிடம் வகிக்கின்றன. |
| பாலைவன மண் | 1.42% (4.32 லட்சம் ச.கி.மீ.) | வட மேற்கு இந்தியா மற்றும் பல்வேறு பகுதிகளிலும் பரவியுள்ளது. (ஆங்காங்கே சிறிது சிறிதாக) குஜராத், பஞ்சாப் | நீர்ப்பாசன வசதியிருப்பின் நெல், கோதுமை, பார்லி, திராட்சை, தர்பூசணி, நீர்ப்பாசன வசதியில்லையெனில் பேரீச்சை போன்றவை வறட்சியைத் தாங்கி வளருவன. |

❖◆❀◆❖